ஓம்

திருச்சிற்றம்பலம்

# செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்

திங்கள்தோறும் வெளிவருவது.


| | | |
|---|---|---|
| சிலம்பு ௭ | மெய்கண்டான்யாண்டு-௭௱௬ புரட்டாசித்திங்கள்<br>1929௵ செப்டம்பர்—அக்டோபர்௴ | பரல் ௬ |


திருச்சிற்றம்பலம்

நன்றுடை யானைத் தீயதில் லானை நரைவெள்ளே
றொன்றுடை யானை யுமையொரு பாக முடையானைச்
சென்றடை யாத திருவுடை யானைச் சிராப்பள்ளிக்
குன்றுடை யானைக் கூறவென் னுள்ளங் குளிருமே.

சம்பந்தர்.

உரை:

நன்று, பெயர்; அருளென்பது பொருள். தீயது, மலம். நரை வெள் ஏறு-தூய வெண்மை நிறம் பொருந்திய விடை யென்க. நரையும் வெண்மையும் ஈண்டு ஒருபொரு ளிருசொற்களாம். இங்ஙனம் வருதல் அவை தொடுத்த பொருளை மேன்மேலும் மிகுத்துக் காட்டுதற் கெனக் கொள்க. 'கழிபெரு', 'தனிமிகு' முதலியவற்றின் வழக்கானும் ஈது ணரப்படும். 'சென்றடையாத திருவுடையா' னென்றார், யாரானும் எளிதில் அணுகிப் பெறுத லேலாத திருவருட் செல்வத்தைத் தானொருவனுமே உடையானென்றற்கு. என்னை? சிவபெருமா னொருவன் மட்டுமே இயற்கையே வினையினீங்கி அருளுடைமையினென்பது. சிராப்பள்ளிக் குன்றுடையான், தாயுமானவர். 'கூற' வென்னும் வினை

யெச்சம் காரணப்பொருளது. உள்ளங் குளிருதல், மகிழ்தல்; குளிரும் மே, மகரவொற்று விரித்தல் விகாரம்.

கோலைவரை யாத கோள்கையர் தங்கண் மதின்மூன்றும்
சிலைவரை யாகச் செற்றன ரேனுஞ் சிராப்பள்ளித்
தலைவரை நாளுந் தலைவரல் லாமை யுரைப்பீர்காள்
நிலவரை நீல முண்டதும் வெள்ளை நிறமாமே.

வரையாத, நீக்காத; கொள்கையர், கருத்துடையவர். தங்கள், சாரியை. அன்றித் 'தம்' சாரியை யெனினுமாம். 'சிலை வரையாக' வென்பதை வரை சிலையாக வென மாற்றுக. 'மதின்மூன்றுஞ் செற்றுத் தலைமை காட்டினுஞ் சிராப்பள்ளித் தலைவரைத் தலைவராயுரையீர்க' ளென்பது முதன் மூன்றடிகளின் கருத்து. மும்மலங்களினின்றும் இயற்கையே நீங்கி நிற்றலே உண்மைத் தலைமையா மாகலின், ஈண்டுச் சிவபிரான்றன் றலைமையை விளக்குதற்கு ஞானசம்பந்தப் பெருமான் மதின் மூன்றுஞ் செற்றமையை ஏதுவாக எடுத்துக் காட்டினமை, மிகவும் பொருத்தமாய் முடிந்தமை காண்க. தலைவரல்லாமை, பொருள் பொருட்டன்மையின்மே லேற்றப்பட்டது. உரைப்பீர்காள், வினையா லணையும் பெயர் ஈறு திரிந்து விளியேற்றது. நிலவரை, நிலத்திற்கு ஓரெல்லை செய்யுங் கடல்; இஃது அன்மொழித்தொகை. நீலம், நீனிற மான நஞ்சு. 'வெள்ளை நிறமாமே' யென்றார், அஃதும் நீறாகுமென்றற்கு. இதனானுஞ் சிவபிரானது தலைமையை யுணரலாகுமே யென்பது கருத்து.

கோட்டும் பறைசீராற் குழும வனலேந்தி
நட்டம் பயின்றாடு நல்லூர்ப் பெருமானை
முட்டின் றிருபோது முனியா தெழுந்தன்பு
பட்ட மனத்தார்க ளறியார் பாவமே.

பறை யொலிகள் சிறப்பினுற் கூட, அனல் ஏந்தி ஆடும் பெருமா னென்க. முட்டு, இடையூறு; இருபோ தென்றது, இரவு பகலை. ஆவது காலையும் மாலையும். எழுந்து, ஊக்கமுற்று. அன்பு ஊறும் நெஞ்சமே தீவினையை நினையாதென்னும் பேருண்மை பெரிதும் நினைவிருத்தற் பாலது.

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே யிருங்கடல் வையத்து
முன்னை நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும் வழிபடு மதனாலே.

மன்னும், பொருந்தும்; வாணன், வாழ்நன்; இது வீரசோழிய முடையார் முதலிய பிற்காலத் தெழுந்த இலக்கண வாசிரியன்மார் கொண்ட புணர்ச்சி முடிபாகும். பன்னுதல், அடிக்கடி சொல்லுதல்; ஆதரித்தல், விரும்பிப் போற்றுதல்; ஏத்தல், புகழல்; பாடுதல், இசை கூட்டி யிசைத்தல்; விரும்பிச் சொல்லியும் புகழ்ந்தும் இசைத்தும் வழி படுமதனாலென்று கொள்க. 'வலஞ்சுழி வாணனை வழிபடு மதனால் முன்னை நீ புரி நல்வினைப் பயனிடை நெஞ்சமே, என்ன புண்ணியஞ் செய்தனை' என்று கூட்டுக. 'என்ன புண்ணியஞ் செய்தனை' யென்னும் வினாவே விடைப்பொரு ளுணர்த்துகின்றமையின், ஈண்டதனை விடை யெனவே கொள்ளல்வேண்டும்; இன்னோரன்னவெல்லாம்,

"செப்பே வழீஇயினும் வரைநிலை யின்றே
யப்பொருள் புணர்ந்த கிளவி யான"

வென்னுந் தொல்காப்பிய (கிளவியாக், கரு) விதியுள் அடங்குமென்க.

வாளார்கண் செந்துவர்வாய் மாமலையான் றன்மடந்தை
தோளாகம் பாகமாப் புல்கினான் றேல்கோயில்
வேளாள ரென்றவர்கள் வள்ளன்மையான் மிக்கிருக்கும்
தாளாள ராக்கூரிற் றான்றோன்றி மாடமே.

கண்ணையும் வாயையுமுடைய மலையான் மடந்தை யென்க. புல்கினான், வினையாலணையும் பெயர்; வேளாளர் தாளாளராய் வள்ளன்மை யான் மிக்கிருக்கும் திருவாக்கூ ரென்பது. 'தான்றோன்றிமாட' மென்றது, அத் திருவாக்கூரிலுள்ள திருக்கோயிலின் பெயர். 'வள்ளல்' என்னுஞ் சொல்லோடு 'மை' யென்னும் பண்புப்பெயர் விகுதி சேர்ந்து 'வள்ளன்மை' யெனப் பண்புச் சுட்டாயிற்று. இங்ஙனமே 'கண்' ணென்னுஞ் சொல்லோடு மை விகுதி புணர்த்துக் கண்ணின் றன்மையாகிய கண்ணோட்டத்துக்கு இராமலிங்க அடிகள் 'கண்மை' யென்று வழங்குவர். தாளாளர், முயற்சியுடையார். இப் பாட்டின்கண், வேளாள ரென்றவர்கள் வள்ளல்களாவரென வருஞ் சிறப்புரை கருத் திருத்தற்பாலது.

இளவழகனார்.

திருவாளர்

# கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்

# தலைமையுரை

இச்சமரச சன்மார்க்க சங்கமானது, தமிழ் மக்களுள் ஒற்றுமையும் கடவுட் கொள்கையும் அருளொழுக்கமும் நிலைபெற்று வளர்ந்தோங்குதற்குரிய நன்முயற்சியைப் பெருந்தவமும் பேரறிவும் வாய்ந்த நாவலூற்றுச் சிவநேச அடிகளின் தலைமைக்கீழ் நடத்திவருகின்றதென்பது யாவரும் அறிந்ததே.

அந் நன்முயற்சியானது, சிறப்பாகக் கொங்குநாட்டிலும் பொதுவாகத் தமிழ் மண்டல முழுவதிலும் பெரும்பயன் விளைப்பான் பொருட்டுச் செய்ய வேண்டுவனவற்றை ஆய்ந்தறிதற் பொருட்டு இப்பெரிய மகாநாடு கூட்டப்படுகின்றது. இதற்குத் தலைமை பூண்பதற்கு மிக்க தகுதியுடைய அறிஞர் பலரிருப்பவும், தமியேன்மீது வைத்த பேரன்பினாலே அடிகள் அருளிச்செய்த கட்டளையை மறுத்தற்கஞ்சி அதற்கிணங்கலாயினேன்.

தமிழ் என்னும் மொழியானது இனிமையென்று பொருள் படும். இனிய இயற்கைப் பொருள் பலவற்றுள்ளும் சிறந்தது தேன். கொங்கு என்ற சொல் தேன் என்னும் பொருட்டாதலின் கொங்குநாடென்பது தமிழ்நாட்டின் சிறந்த பகுதியென்று கருத இடமுண்டு. கொங்குநாட்டு மக்கள் கள்ளமில்லாத தூய உள்ளத்தவர்களாய், இறைவன்பால் தேன் ஒழுக்குப்போன்ற பேரன்பு செலுத்துவதிற் சிறந்தோராதலின் அந்நாட்டின் சால்பு மிகவும் பாராட்டத்தக்கது. தேனுட்பெய்த பொருளானது நலிவின்றிப் பாதுகாக்கப்படுதல்போல இந்நாட்டு மாந்தர் உள்ளத்திற் புகும் நல்லறிவுரைகள் பழுதுபடாது நிலைபெறும். ஆதலின் இம்மகாநாட்டிற் பேசப்படும் உண்மைப் பொருள்களனைத்தும்

---

இது கொங்குமண்டல சமரச சன்மார்க்க சங்க மகாநாடு ௩-வது ஆண்டு நிறைவு விழாவின்கண் நிகழ்த்தியது.

தங்குதற்குத் தக்க இடம் இந்நாட்டினரது உள்ளமென்பது தெளியப்படும். நறுந்தேனானது நற்கனிகளில் ஊறித் ததும்பி ஒழுகுந் தன்மையது. எல்லையில்லாத பேரறிவின் இணையற்ற பேரருட் கனியாக இளங்குமரப்பெருமான் வீற்றிருந்தருளும் இப்பழனிமா நகரமானது அறிவின் தேன் ஊற்றெடுத்துப் பெருகுதற்குரிய பேரிடமாதல் காண்க. இந்நகரத்தை நற்கனியாகவும் இச்சமரச சன்மார்க்க சங்கத்தை நற்கனியின் எப்பகுதியினின்றுங் கசிந்து நிரம்பும் தேன் பெருக்காகவும் அறிஞர் மதிப்பர். இன்னொரு முறையாகப் பார்க்குமிடத்து, இத்தமிழ் நாட்டினை நிலவரைப்பாகவும் கொங்கு மண்டலத்தினைத் தேனலர் பூம்பொழிலாகவும் இப்பொதுனி மாநகரத்தைக் கனி நிறைந்த நடுவிடமாகவும் இம் மாபெருஞ் சங்கத்தை அதன்கண் உள்ள அறிவுத்தேன் கூடாகவும் கருதுதல் தவறாகாது. இப் பேரவையை அன்பாகிய நீர் நிறைந்த பொய்கையாகவும் ஈண்டுச் சொற்பொழிவு நிகழ்த்தும் அறிஞர் குழுவினைச் செவ்வி மிகுந்த தாமரையாகவும் அதன் நடுவில் இருப்போனை அத்தாமரையிலுள்ள வண்டாகவும் கருதுக. ஈண்டுள்ள அறிஞர்களின் நல்லுரை கேட்டு மகிழவந்த யான் யாதானும் ஓர் உரை பகர்வதற்குரியன் அல்லேனெனினும் தேன் கொள்ளப்புகும் வண்டானது ஒலி யெழுப்புதல்போலச் சில சொற்கள் முற்கூறுதல் எனது கடமை யாகும்.

சமரச சன்மார்க்க சங்கம் யாதென்று ஆராய்வதே இம் முன்னுரையின் உட்கோளாகும். சமரசமென்ற சொற்றொடர் ஓத்த சுவை யென்று பொருள்படும். சன்மார்க்கமென்பதின் பொருள் நன்னெறி. ஓத்த சுவையுடைய நன்னெறியெனவே, பல் வேறு வகைப்பட்ட கொள்கையுடைய பலரையும் ஒற்றுமைப் படுத்தவல்ல நயஞ்சிறந்த பெருவழி அஃதென்பது பெறப்படும். சமயம், குலம், நாடு, மொழி என்பவை காரணமாக வேறுபாடு டைய பலரும் அறிவாராய்ச்சியினால் ஒத்த மனத்தினராய்ப் பெரும் பயன் எய்துதற்குரிய பொது நெறியே சமரச சன்மார்க்கமாகும். அத்தகைய பொது நெறியை உலகிற்குப் போதிக்கும் பெருமான் ஆசிரியர் திருவள்ளுவனாராவர். அப்பெரியார் சில்லாயிர வாண்டு

கட்கு முன்னமேயே தமிழ் நல்லிசைப் புலவருள் தலை சிறந்து விளங்கினர். அவரை 'டாக்டர் சீ. யூ. போப்' என்பவர் "மன் பதைப் பொதுப்பாவல" ரெனவும் "மாசிலா வுள்ளத்து மெய் யறிஞ" ரெனவும் போற்றினர். ஆதலின் அவரது நூலே பொது மறை யெனத் தக்கது. அஃதே தமிழரது வேதமெனவுங் கடைப் பிடிக்க.

பொதுமறை யென்பதின் பொருளைப் பலர் நன்ருக ஆராய் வதில்லை. எல்லாச் சமயத்தவரும் ஒப்புக் கொள்ளக் கூடிய நூலே பொதுமறையாமென்பர் சிலர். எல்லாச் சமயத்தார்க்கும் ஒத்த கொள்கை ஒன்று அல்லது இரண்டுதானும் உண்டோ என்ற ஐய மெழுகின்றது. பொய்யென்பது யாதென ஆராயப் புகின், ஒரு சிலர், எக்காரணம் பற்றியும் பொய் சொல்லுதல் கூடாதென்பர். வேறு சிலர் ஒரோவொருகால் 'பொய்ம்மையும் வாய்மையிடத்த' வென்பர். புலாலுண்ணல் தீயதெனின் அதை நன்றென்று வாதிப் பாரும் உளர்; பிறவும் அன்ன. ஒழுக்கத்தைப் பற்றிய கொள்கை களே இவ்வாறு முரணுற்றுக் கிடப்ப, சமயப் பிணக்குகளோ அளவில்லாதன வென்பது தெளிவு. "பேசும் பேச்சினைச் சமயங் கள் பிணக்குறும் பிணக்கை வாசமாலையா யாவரே முடிபெண்ண வல்லார்" என்ற கம்பர் திருவாக்குங் காண்க. "ஓது சமயங் கள் பொருளுணரும் நூல்கள் ஒன்ருேடொன் ருெவ்வாம லுள பலவு மிவற்றுள் யாது சமயம் பொருள் நூல் யாது இங்கு என் னில், இதுவாகும் அதுவல்ல தெனும் பிணக்க தின்றி, நீதியினு னிவை யெல்லா மோரிடத்தே காண நின்ற தியாதொரு சமயம் அது சமயம் பொருள் நூல்" என்ற சிவஞானசித்திப் பாட் டுப் பகுதியானே பல சமயங்கள் கூறும் உண்மைகள் அவ்வவற் றிற்குரிய இடம் பெற்று ஒருங்கு திகழும் நூலே சிறந்த நூலா மென்று குறித்தமை உற்று நோக்கத் தக்கது. இதனல் பொது நூல் யாவரும் உடன்படும் கொள்கைகளையுடைய நூலன்மை யறிக. பலசமயங்களிலுமுள்ள உண்மைகளேயே பொதுநூல் தன் கண்ணுடைத்தாயிருத்தல் வேண்டுமே யொழிய அவற்றிலுள்ள குறைபாடுகளையும் உடன்கொண்டிருத்தல் சாலாது. பல்வேறு பதிகளிலிருந்து வருவார் தம்முட் கலாமின்றி ஒற்றுமையாய்

ஒருங்கு வைகுதற்கு இடமாய பொதுப் பேரவைபோலப் பல்வேறு கொள்கைகளும் ஒருமைப்பாட்டுடன் விளங்குதற்குரிய நூலே பொது நூலென்றல் சாலும். திருக்குறள் அத்தகைய பொது நூலென்றறிக.

உலோகாயதமென்னும் நாத்திக மதமே இந்திய நாட்டிலுள்ள சமயங்களனைத்தினும் மிகத் தாழ்ந்த சமயமாகக் கருதப் படும். அம்மதத்தினர் நான்கு பூதங்களுண்டென்பர். உழவு வாணிகம், அரசியல் முதலியவற்றின் சார்பான முயற்சியும் இல்லின்ப நாட்டமும் மக்கட்கு வேண்டப்படுவன வென்பர். திருவள்ளுவர் நூலிலே நாற்பூதத்தோடு ஐந்தாவது பூதமும் குறிக்கப்பட்டது. "பூதங்களைந்தும் அகத்தே நகும்" என்பதால் அறிக. அன்னோர் கூறும் அரசியல் முதலியனவும் திருக்குறளுள் விரித்தோதப்பட்டன. ஆதலின் உலோகாயதர்க்கும் திருவள்ளுவ நூல் நன்மை பயப்பதே யாகும். புத்த மதத்தினர் சிறப்பாகக் கூறும் அருளொழுக்கத்தைத் திருவள்ளுவனார் பல அதிகாரங் களிலே வற்புறுத்துகின்றார். புத்தர், ஒருவன் ஒன்றைத் தானகக் கொன்றால் பாவம்! பிறர் கொன்றதைத் தின்றால் குற்றமில்லை யென்றார். திருவள்ளுவனாரோ "தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும் - விலைப்பொருட்டா லூன்றருவா ரில்" என்ற விடத்து அதனை மறுத்தனர். இதனால் திருவள்ளுவர் புத்த சமயத்தவரல்லரென்பது தெளிவு.

இனிச் சமணர் கூறும் நல்லொழுக்கங்க ளனைத்தும் திருவள்ளுவர் நூலிற் காணப்படினும் அவர் உடன்படாத கடவுட் கொள்கை, எழுபிறப்பு, முதலிய பல உண்மைக் கருத்துக்களைத் திருவள்ளுவனார் விதந்தோதுதலின், அவரைச் சமணரென்றலும் தவறு. சமணர் உலகம் தானே உண்டாவதென்பர். திருவள்ளுவனார் முதல்வன் தனது திருவருட் சத்தியின் துணைகொண்டு உலகத்தைத் தோற்றுவித்தனரென்றும், உயிர்கட்கு வேறாக, உலகிற் கடிப்படைச் சார்பாகவுள்ள மெய்ப்பொருள் ஒன்றுண்டென்றும், வீடடைவதற்குச் சமணர் கூறும் ஐம்பொறியடக்கம் போதாதென்றும், மெய்ப்பொருளுணர்ச்சி வேண்டுமென்றும்

குறிப்பித்தனர். சமணர், வினையின் பயன் அது செய்தானைத் தானே சென்றடையுமென்பர். திருவள்ளுவனார் இறைவன் அதனை ஊட்டுவிப்பானென்பர். இக்கருத்துக்கள் பின்வருங் குறட்பாடல்களிற் காண்க. "ஆதிபகவன் முதற்றே யுலகு" "எழுமை யெழுபிறப்பும்" "சார்புணர்ந்து சார்புகெட வொழுகின்" "ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே - மெய்யுணர்வில்லா தவர்க்கு" "வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி - தொகுத் தார்க்குந் துய்த்த லரிது". இனி, கடவுட் கொள்கையுடைய கிறித்துவ, மகமதிய சமயத்தார்க்குந் திருவள்ளுவனார் கடவுட் கொள்கையும், நல்லொழுக்கமும் பற்றிக் கூறுவன யாவும் ஒப்பாவனவே. எனினும், அன்னோர் கைக்கொள்ளாத இருவினையும், மறுபிறப்பும் திருவள்ளுவ நூலுள் யாண்டும் புலனாதல் காண்க.

இனி, இயல்பாகவே பற்றற்ற பரம்பொருளையும், அதனின் வேறாய அப்பரம்பொருளின் திருவடி சேர்தற்குரியனவாய்ப் பிறவிக்கடலுள் அலமரும் பல்லுயிர்களையும், சுவையொளி யூறோசை நாற்றமென்றைந்தின் வகையாய் நிலையாமை மிக்க உலகினையும், வேறு வேறாகக் கூறுதலின், உலகமும் உயிரும் இல்பொருள்; இறைவன் ஒருவனே உள்பொருளெனக் கூறும் ஏகான்மவாதக் கொள்கைக்குத் திருவள்ளுவ நூலில் யாண்டும் இடமின்மை யறிக. திருவள்ளுவர் விதந்தோதும் பரம்பொருளையே ஏகான்மவாதியர் பரப்பிரமமென்பர். இறைவன் பிறப்பிறப்பில்லானென்பது திருவள்ளுவர் கருத்தாதலின், பிறப்பெடுத்துவருந் தெய்வங்களைத் திருவள்ளுவர் கடவுளராகக் கருதவில்லையென்பது தெளிவு. முடிபான வீட்டு நிலையை அவர் "பேரா வியற்கை" என்றமையானும், இறைவன் திருவடி யெய்துதலே வீடாமென்று குறிப்பித்தலானும் இறைவன் திருவடியிலே இரண்டறக் கலத்தலாகிய அத்துவித முத்தியினையே ஆசிரியர் எடுத்தோதினர் என்றறிக. இறைவனைச் சார்பு என்ற சொல்லாற் சிறப்பித்தமையான் அவன் உயிர்களோடும், உலகத்தோடும் அத்துவிதமாய் நின்றநிலை குறிப்பித்தவாறும். இதனால் அத்துவிதத் தன்மை யுணர்த்தாத துவித சமயங்களும், இறைவனோடு உயிர்கட்குச் சமமுண்மை கூறும் சமவாத முதலிய சமயங்களும் மறுக்கப்பட்டொழிந்தமை காண்க.

இன்னும் கடவுள் வாழ்த்து அதிகாரத்தின்கண் இறைவனது திருவடியையே பன்முறை விதந்தோதுதலின், இறைவனுக்குத் திருவுருவம் உண்டென்பது ஆசிரியர் கருத்தாதல் காண்க. "சிறப்பொடு பூசனை செல்லாது...வானோர்க்கும் ஈண்டு" என்றமையான் நீரோடு நீரினால் தோன்றும் பூவும், விளையும் உணவுப் பொருளும் கொண்டு நிகழ்த்தும் நாட் பூசனையும், சிறப்பு விழவும் போதருதலின், இறைவனது உருவ வழிபாடு திருவள்ளுவனார்க்கு ஒப்பாவதென்று கொள்ள இடமுண்டு. "உள்ளம் உள்ளது உணரி"னென்றும், "செம்பொருள் காண்பதறி" வென்றும் கூறினமையான் இறைவனது அகண்ட வழிபாடு குறிக்கப்பட்டமை ஓர்க. இதனால் இறைவனது உருவ வழிபாட்டினை மறுக்கும் பிரம சமாஜ ஆரிய சமாஜக் கொள்கைகள் தவறென்ப துணர்த்தப்பட்டது. இனி, ஆசிரியர் திருவள்ளுவனார் தமது நூலுள் நாற்குலத்தை விதந்தோதாமையானும், ஒழுக்க முடைமையே குடிமையென்றமையானும், குடிமையும், கல்வியுங் காரணமாகவே குலச் சிறப்புக் கொண்டனர் என்றறிக. "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்" என்றமையானும், "மழித்தலும் நீட்டலும் வேண்டா" வென்றமையானும், வருணம் வேடம் முதலியவற்றைக் காரணமில்லாது பாராட்டுதல் பெருந்தவறென்பது தெளியப்படும். அந்தணர் என்போர் எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அறவோராதலின், அவர் ஒரு குலத்தினர் அல்லரென்பது வெளிப்படை. அந்தணர் நூலென்பதற்குப் பெரியோரது அருட்பனுவல் என்று பொருள் கொள்ளுதலே பொருத்தமாகும். அது ஆரியப் பிராமணருடைய வடமொழி வெதமென்று கோடல் ஆசிரியர் கருத்திற்கு முற்றிலும் மாறாகும். "மறப்பினும் ஒத்துக்கொளலாகும் பார்ப்பான்" என்ற விடத்துப் பார்ப்பா னென்பது நூல்களைக் கற்போனையும் 'ஒத்து' என்பது நூலினையும் குறிக்குமென மணக்குடவர் உரை கூறிப் போந்தனர். அவ்வுரையே திருவள்ளுவர் பொது நோக்கினை இனிது விளக்குவதாகலின், அச்சொற்களுக்கு வேறுபொருள் கோடல் தவறாகும். "ஆபயன் குன்றும்" என்ற திருக்குறளிலே அறிதொழிலோர் என்ற பாடமே தருமருரையிற் காணப்படுதலின், அதற்கேற்பப் பொருள் கொள்ளு

தலே முறையாகுமென்றறிக. அதற்கு மாறுகப் பொருள்கொள்ளு தல் அறிவிற்குச் சிறிதும் பொருத்தமில்லாததாகும். ஈண்டுக் கூறியவாற்றுன், சுமார்த்த மதத்தினர் கொள்கைகளைத் திருவள்ளு வர் ஒப்புக்கொள்ளவில்லையென்பது தெள்ளிதிற் புலனுகும். ஊன் பயில்கின்ற வேள்வி திருவள்ளுவருக்கு ஒப்பாவதன்று. பலவகை அறங்களொடு கலந்திருப்பதாலும், வழிபடுங் கீழ்த் தெய்வங்கள் சிலவற்றிற்கு மகிழ்ச்சி விளைத்தலாலும் வேள்வியிற் கொலை செய்தல் குற்றமாகாதென்பாரது கூற்றினை விதந்து நன்மை பல வற்றோடு கலந்திருப்பினும், தீமை தீமையே; ஆதலின், அதனைச் சான்றோர் கைக்கோடல் தக்கதன்றென்பார், "நன்றுகும் ஆக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக் கொன்றுகும் ஆக்கம் கடை" என்றூர். அக்கருத்தே பற்றிப் பல நன்மைகளோடு கூடிய ஒரு தீமையைச் செய்வதைப் பார்க்கினும், தீமையொன்றினைச் செய் யாதிருத்தலே சிறந்ததென்பார், "அவிசொரிந் தாயிரம் வேட்ட லின் ஒன்ற - னுயிர்செகுத் துண்ணுமை நன்று" என்றூர். இது வரை கூறிப்போந்தவாற்றுல், பல சமய உண்மைகளும் திரு வள்ளுவநூலில் அறியக்கிடப்பனவென்பதும், அவற்றின் குறை பாடுகள் ஆண்டுக் காணப்படுமாறில்லையென்பதும் இனிது விளங் கும். திருவள்ளுவர் புதல்வியரைப் பெறுவதினும் புதல்வரைப் பெறுதல் சிறந்ததென்று கூறவில்லை. "மங்கலமென்ப மனைமாட்சி மற்றதன் நன்கலம் நன்மக்கட் பேறு" என்றவிடத்து நன் மக் கள் என்றே பொதுபடக் கூறினமையானும், "அறிவறிந்த மக் கள்" என்றவிடத்தும் ஆண்மக்களைச் சுட்டவில்லையாதலானும், பெண்மக்களினும் ஆண்மக்களுக்கே சிறப்புக்கொடுக்கும் ஸ்மிரு திக் கொள்கையானது அவர்க்குடன்பாடன்றென்பது தெளிக.

இனி, ஆசிரியர் திருவள்ளுவனுர் தமிழ் மக்கள் பொதுவாக நன்கு உணரவேண்டிய சமய உண்மைகளைத் தமது நூலிற் பல விடங்களில் விதந்தோதினுர். சிலர் கடவுள் வாழ்த்தென்னும் அதிகாரம் திருவள்ளுவரால் இயற்றப்படவில்லையென்று இக் காலத்தில் புதுவதாகத் தக்க காரணங்கள் காட்டாது கூறுகிறுர் கள். அவ்வாறு கொள்ளுவதனுல் அவர்கள் கருத்து நிரம்புமாறில் லை. உலகத்தைப் படைத்த ஒரு கடவுள் உண்டென்று கடவுள்

வாழ்த்தின் முதற் குறள் எடுத்துரைக்கின்றது: இதனை மறுப்பார் "இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து—கெடுக உலகியற்றி யான்" என்ற திருக்குறளும் திருவள்ளுவர் திருவாக் கன்றென நாட்டுதல் கூடுமோ ? ஈதலே நன்று, ஏற்ப திகழ்ச்சி யெனத் திரு வள்ளுவர் பிறவிடங்களினும் வற்புறுத்தி யிருத்தல் தெளிவு. "நல்லா றெனினும் கொளல் தீது மேலுலகம்-இல்லெனினும் ஈதலே நன்று" என்றது காண்க. முற்கூறிய திருக்குறளுள் 'மக்களுட் சிலராதல் ஐய மெடுத்தாலன்றி உயிர் வாழ்தல் முடியாதென்னும் படியாக உலகினைப் படைத்தவன் அதனை யமைத்திருந்தால் அவன் கெடுக' வென்றமையான் உலகத்தைப் படைத்தவன் ஒருவன் உண்டென்பதும், அவன் இரத்தற் றொழிலை இன்றி யமையாத தொன்றாக அமைக்கவில்லையென்பதும் உய்த்துணரப் படும். கடவுள் வாழ்த்து இரண்டாவது குறளில், "வாலறிவன்" என்று இறைவனைக் கூறியதற் கேற்ப "ஓர்த்துள்ளம் உள்ள துணரின்" என்றார். உள்ளத்தாலறியப்படும் உண்மைப் பொரு ளெனவே அது மெய்யறிவாய் இலங்கும் பொருளென்பது உய்த் துணரப்படும். "மலர்மிசை யேகினான்" என்றமையான் எல்லா வற்றையும் இயக்குபவன் கடவுளென்பது போதரும். அதற் கேற்ப எல்லா உயிர்களுக்கும் வினைகளை யூட்டுகின்றவன் இறைவ னென்று வற்புறுத்துவார் "வகுத்தான் வகுத்த வகையல்லால்!" என்றார். "வேண்டுதல் வேண்டாமை யிலான்" என்றதற் கேற் பப் 'பற்றற்றான்' என்றார். 'இறைவன்' என்பதற்கேற்ப இறை மைக் குணமாகிய நேர்மையும் நீதியும் உடையன் என்பார் 'செம் பொரு' ளென்றார். முதல்வனை யடையும் மெய்ந் நெறியினை யறிந்து, அந்நெறி நிற்க வேண்டுமென்றதற் கேற்பக் "கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்—மற்றீண்டு வாரா நெறி" என்றார். "அறவாழி யந்தணன்" என்றதற்கேற்பச் "சார்பு" என்றார். "தனக்குவமை யில்லாதா" னென்றதற் கேற்ப "எப் பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்-மெய்ப்பொருள்" என்றார். இவ்வாறு கடவுள் வாழ்த்தினுட் போந்த கருத்துக்க ளனைத்தும் நூலுள்ளுங் காணப்படுதலின், கடவுள் வாழ்த்து திருவள்ளுவர் வாக்கன் றென்று கூறியதனால், போந்த பயன்

யாதும் இல்லை. கடவுள் பிறப்பிறப் பில்லாதவர்; இயற்கை யுணர்வுடையவர்; முற்றுணர் வுடையவர்; எல்லாவற்றையும் இயக்குகின்றவர்; இயல்பிலேயே பற்றற்றவர்; ஒப்பற்றவர்; பெருங் கருணையாளர்; தன்னை வழிபடுவார்க்குப் பெரும் பயன் அளிப்பவர்; வினைக்குத் தக்க பயனை உயிர்கட்கு ஊட்டுகின்ற வர்; என்றும் ஒரு படித்தாய தன்மை யுடையவர்; நீதியாளர்; எல்லாப் பொருட்கும் ஆதரவானவர் என்னும் இக்கருத்துக்கள் யாவும் திருவள்ளுவ நூலிற் காணப்படுகின்றன.

இனி, உயிர், பிறப்பிறப்புடையது. என்றைக்கும் அழியாதது. காம வெகுளி மயக்கங்கட் குட்பட்டது. இருவினை யுடையது. பொருளல்ல வற்றைப் பொருளென்றும், நில்லாத வற்றை நிலை யுடைய வென்றும், கருதும் மயக்க முடையது. கடவுளையறிந்து பேரின்ப மடைதற் குரியது. அவாவே பிறப்பிறப்பிற்குக் கார ணம் என்னும் இத்தகைய கருத்துக்கள் திருக்குறளில் வந்துள் ளன. உலகம் ஐம்பூத முதலிய தத்துவங்களாலாய தென்பதும், அது நிலையாமை யுடையதென்பதும், பிறவும், ஆண்டறியக் கிடப் பனவே. கடவுள், உலகம், உயிர் என்பவற்றைப் பற்றிய பண்டைத் தமிழ் மக்களது சமயக் கருத்துக்களைப் பொது முறையில் திரு வள்ளுவர் கூறிப்போந்தமையின் இது பொது நூலெனப் பட் டது. பொதுவாகச் சமய வுண்மைகளைத் தெரிவிக்கும் நூலே வேத மெனப்படும்.

இனி, திருவள்ளுவர் நூலே தமிழ் மக்களுக்குரிய வேத மென்பதை இனிது விளக்குவாம். வேதமென்ற சொல்லானது, அறிதற்குக் கருவியென்று பொருள் படும். சமய அறிவினைக் கொடுக்கும் நூலினை வேதமென்பது மரபு. சைவர், வைணவர், சுமார்த்தர், புத்தர், சமணர், கிறித்துவர், மகமதியர் முதலிய எல்லாச் சமயத்தாரும், தத்தம் சமய நூலினை வேதமென்று வழங்குதல் வெளிப்படை. ஆதலால், வேத மென்ற சொல்லினைக் கேட்டவுடனேயே வடமொழியிலுள்ள இருக்கு யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு நூல்களையே அச்சொல் குறிக்கு மென்றல் தவறு. அந்நான்கிற்கும் வேதமென்ற சொல்லை

இயைத்து வணங்குதல் மரபாயிருத்தலின், அவை மாத்திரமே வேதமாமென்று கோடல் பொருத்தமின்மை யறிக. சைவர்களுக்குரிய சிவாகமங்களைப் பெரிய வேதமென்று மகாபாரதங் கூறுகின்றது. தமிழ் நாட்டிலே நெடுங் காலமாக, வேதம், சிவாகமம், என்னும் இரண்டு நூல்களையும் பிரமாணமாகப் பேசுவது வழக்கமாயிருக்கின்றது. சிவாகமத்தையும் வேதமென்றவிடத்து, வேதமென்பதைப் பொது வேதமெனவும், சிவாகமமென்பதைச் சிறப்பு வேதமெனவுங் கொள்ளவேண்டும். பொது நூலிற் சொல்லிய கொள்கைகளைத் தழுவி நடத்தற்குரிய விதிகள் சிறப்பு நூலுட் காணப்படும். பொது நூலினைப் பற்றிய ஆராய்ச்சியே ஈண்டு எடுத்துக்கொண்டமையான், சிறப்புநூலை விடுத்துத் தமிழர்க்குரிய பொது வேதம் யாதென்பதை ஆராய்வோம். தமிழிற் சிறந்த பண்டை நூலாகிய தொல்காப்பியம் இயற்றப்பட்ட காலத்தே, இப்போது வழங்குகின்ற இருக்காதி வேதங்கள் தொகுக்கப்பட வில்லையென்று **ஆசிரியர் நச்சினார்க்கினியர்** கூறுகின்றாராதலின், தமிழ் மக்களுக்குரிய ஆதிவேதம் அவையல்லவென்பது போதரும். தொல்காப்பிய நூலுள் தமிழருடைய முதனூல் கடவுளாலே இயற்றுவிக்கப்பட்டது என்னும் கருத்துடைய "வினையினீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்டது முதனூலாகும்" என்ற சூத்திரங் காணப்படுதலால் தொல்காப்பியத்திற்கு முற்பட்ட முதனூல் தமிழர்க்கிருந்ததென்பது தெளியப்படும். தொல்காப்பியப் பாயிரத்துட் குறித்த 'நான்மறை' யென்பதும் அதுவேயெனக் கருத இடமுண்டு. அறம், பொருள், இன்பம், வீடெனுநான்கும் நூற்பயனென்று தமிழர் கொண்டமையான், அவர்களுடைய முதனூலும் அந் நாற்பொருளையும் கூறுவதாக இருத்தற்பாலது. தேவாரத்துள் "அழிந்த சிந்தை யந்தணாளர்க்கு, அறம் பொருளின்பம் வீடு மொழிந்த வாயான், முக்கணாதி" யென்றும், திருவாசகத்துள், "அருந்தவருக் காலின்கீழ் அறமுதலா நான்கினையும், இருந்தவருக் கருளுமது" என்றும் வரும் பகுதிகள் பலவாமாதலின், அவற்றுள் குறிக்கப்பட்ட நூலும், தொல்காப்பியர் கூறிய தமிழரது முதனூலும், ஒன்றே யென்று கொள்

ளுதல் தவறாகாது. இதனால், அறம், பொருள், இன்பம், வீடு, என்னும் நான்கினையும் கூறுந் தமிழ் முதனூல் தொல்காப்பியர் காலத்துக்குக்கு முன்னேயே தமிழகத்தில் திகழ்ந்ததென்பது தெள்ளிதிற் புலனாம். தொல்காப்பியர் காலத்திற்கு முன்னேயிருந்த பல நூல்களும், பிற்காலத்தே மறைந் தொழிந்தமை போலத் தமிழ் முதனூலும் திருவள்ளுவர் காலத்திற்கு முன்னேயே மறைவுபட்டது. பண்டைக் காலத்தே முதனூலானது, அறிஞர்கள் உள்ளத்தே நிலவியதாய்த் தக்க மாணவர்க்கு அவர்களால் போதிக்கப்பட்டு வந்தமையின், அவற்றின் கருத்துக்களே நாடெங்கும் பரவிப் பயன்பட்டனவே யொழிய அவைகள் பெருவழக்காக, யாண்டும் எழுதப்பட்டுத் திகழவில்லை. ஆதலின், அந்நூல்கள், மறைந்தொழிவதற் கேதுவாயிற்று. சற்றேறக்குறைய ஆயிரத்து முன்னூறு ஆண்டுகட்கு முன் தோன்றிய தேவாரத் திருமுறைகள் அவைதோன்றி மூன்று நூற்றாண்டுகள் ஆவதற்குள், இருந்தவிடம் தெரியாமல், மறைவுற்றுச் சிதம்பரத்திலே ஓர் அறையுள் அடங்கிப் போயினவெனின், பல்லாயிர வாண்டுகளுக்கு முன்தோன்றிய தமிழ் நூல்கள், மறைந்தொழிதல் புதுமையன்று. புராணங்களில் வேதமானது கடலில் மறைந்ததென்று பலவிடங்களில் கூறும் ஐதிகம் தமிழ் முதனூல்கள் மறைந்து போனதைக் குறித்தல் கூடும். மறைவுற்ற தமிழ் முதனூல்களாகிய தமிழர் வேதங்களின் கருத்துக்களைத் தொகுத்து நாற்பொருளையும் கூறும் பொதுமறையாக ஆசிரியர் திருவள்ளுவர் தமது நூலை வகுத்தருளினமையான், அவருடைய பெருநூலே இப்பொழுது தமிழர் வேதமாக நிலவுகின்றது. துறவறவியலுள் வீட்டுநெறி கூறினமையான், திருவள்ளுவர் நூல் நாற்பொருளையும் கூறுவதென அறிக. பின்வரும் திருவாக்குகள் இதனை வற்புறுத்தும். "தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளால்—ஆனா அறமுதலா வந்நான்கும்....உரைத்தாற்கு" "அறம் பொருளின்பம் வீடென்னும் அந்நான்கின் திறந்தெரிந்து செப்பிய தேவை" "இன்பம் பொருளறம் வீடென்னும் இந்நான்கும்—முன்பறியச் சொன்ன முதுமொழிநூல்" "அறனறிந்

தேம் ஆன்ற பொருளறிந்தேம் இன்பின்—திறனறிந்தேம் வீடு தெளிந்தேம்" என்பன காண்க. நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளாகக் கூறினர் என்று, ஒரு புலவர் செப்பியதற்குக் காரணம் பண்டைத் தமிழ் நான்மறையின் கருத்துக்களை அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பகுதியில் வைத்து ஓதினமையே யென்றுணர்க. அயன் வேதம் கூறியதாக ஐதிகம் இருத்தலால், தமிழ் நன்மக்களுக்கு வேதமளித்த திருவள்ளுவனாரை, அயன் என்று கூறும் உபசார வழக்கு ஏற்பட்டது.

இதுகாறும் கூறியவற்றால் திருவள்ளுவனாரது, திருக்குறள் நூலே தமிழ் மக்களுக்குப் பொது வேதமென்பது துணியப்படும்.

அப் பொதுவேதத்துள், பொதுவாகவும், குறிப்பாகவும் கூறப்பட்ட சமயவுண்மைகளையே சிறப்பு வேதமாகிய தேவார திருவாசகங்கள் எடுத்து மொழிவனவாயின. அவ்வுண்மைகளைத் தழுவி நடக்கும் முறையினையே, சரியை, கிரியை, யோகம், ஞானம், என நான்காக வகுத்துத் திருமந்திர முதலிய சிவாகமங்கள் இனிது விளக்கும். பண்டைக் காலத்தே, அறிவர் என்ற பெரியோர்கள் சமயப் பழக்கவழக்க முறைகளையுணர்த்தும் பொருட்டு இயற்றிய நூல்களே பிற்காலத்திலே ஆகமங்களாயின. இப்பொழுது தமிழிலே சிறப்பாகவுள்ள ஆகமம் திருமந்திரம். ஆகமங்களின் சார்பாக, மருந்து மந்திரம், யோகம், ஞானம், என்பவற்றை விளக்கும் நூல்கள் சித்தர் நூலெனப்படும். சித்தநூற் கோவையுள் தவறாகக் கலந்துள்ள போலி நூல்களை யொழித்து ஏனையவற்றைப் பாதுகாத்தல் நம்மவர் கடனாகும். திருக்குறள், தேவாரம், திருவாசகம் முதலிய வேதங்களின் பொருளையும் திருமந்திர முதலிய ஆகமங்களின் கருத்துக்களையும், தெள்ளிதின் விளக்கும் நூல்கள் சிவஞானபோத முதலிய சைவசித்தாந்த சாத்திரங்களாகும். வைணவர்கள், ஆழ்வார்கள் அருளிச்செய்த திருப்பாடல்களைத் தமது சிறப்பு வேதமாகக் கொள்வர். சைவ வேதா

கம சாத்திரங்களும், வைணவ வேதங்களும், பொதுமறையாகிய திருவள்ளுவர் நூலின் கருத்துக்களையே விரிவாக விளக்குவன வென்றறிக. இந்நூல்களே சிறந்த பிரமாணமாகலின், இவற்றிற்கு ஒத்த முறையிலேயே பிறநூல்கட்குப் பொருள் கோடல் வேண்டும். சைவர்களது வேதத்தின் முடிபும் ஆகமத்தின் முடிபும் ஒத்த தன்மையன வாதலானும், வடமொழி வேதசிவாகமங்களின் முடிபுகளும் அத்தன்மையனவேயாமென்பது சைவ அறிஞர் பலருடைய கருத்தாதலானும், அம்முடிபொற்றுமையை விளக்குவான் தாயுமானப் பெருந்தகையார் "வேதாந்த சித்தாந்த சமரச" மென்றார். வேதத்தின் முடிபு வேதாந்த மெனப்படும். ஆகமத்தின் முடிபு சித்தாந்த மெனப்படும். இரண்டிற்கு முள்ள சமரசத்தை அறிய விரும்புவார் திருக்குறட் கருத்தினை நன்கு ஆய்தல் வேண்டும். சமரசமென்பது திருவள்ளுவ நூற் பயனேயாகு மென்றுணர்க. சன்மார்க்கமாகிய அறநெறியை யுணர்த்துவதிலும் திருவள்ளுவ நூலே சிறந்ததாகலின் அதுவே சமரச சன்மார்க்க சங்கத்திற்கு வேதமாகும். அந்நூற் கருத்திற்கு மாறுபடாத சைவ வைணவ நூல்களனைத்தும் சன்மார்க்க சங்கத்தார்க்கு ஏற்புடையனவேயாமென்று கொள்க.

## இனிச் சன்மார்க்க சங்கத்தார் கடமைகளை ஆராய்வாம்.

நற்றமிழ் நூலறிவினை வளர்ப்பதினாலேயே தமிழ்மக்களுள் ஒற்றுமையும், கடவுள்பாலன்பும், நல் வாழ்க்கையும், உண்டாய் நிலைபெறு மாதலின், அஃதே முதற்கண் இச்சங்கத்தாரால் நிகழ்த்தப்பெறுதற் குரியது. அறிவினை வளர்ப்பதற்கு முயலாமல், மூடபத்தியை மாத்திரம் வளர்த்தல் நன்றன்று. மூடபத்தி ஆராய்ச்சிக்காரரின் தாக்குகளால் சிதறுண்டகாலை அன்பு வழிபாட்டிக்குரிய நியமங்களனைத்தும் மக்களால் கைவிடப்படும். அறிவினால் அன்புவளருமாயின் அந்நியமங்கள் பிறரால் நலிவடையமாட்டா. ஆதலால், நமது கோயில்களிலே உருவ வழிபாட்டு முறைகள் நிலைபெற வேண்டுமாயின், அவற்றைப் பாது

காத்தற்குரிய நல்லறிவினை நம்மவருட் பரவச்செய்ய வேண்டும். அங்ஙனம் பரவச்செய்தற்குரிய முயற்சியானது நமது நாட்டில் போதிய அளவு இன்னும் ஏற்படவில்லை. அறிவினை வளர்க்கப் புகுகின்றவர்கள் பலரும் ஆங்கில முதலியவற்றைக் கற்று ஊதியந் தேடுவதிலேயே பொழுது போக்குகின்றார்கள். செல்வர்களுள் அறத்திற்கெனப் பொருட்செலவு செய்யும் பலரும் நற்றமிழறிவினை வளர்த்தற்குப் பொருளளிப்பதில்லை. புகழ் கருதிப் பொருத்தமில்லாத வழிகளிலேயே பொருள்களை வீணாகப் பாழுக் கிறைக்கின்றார்கள். புண்ணியம் இன்னதென்பதைத் தெளிவாக அறியாமல் சூழ்ச்சியாளர் சொல்வழி நின்று தம்மவர்க்குப் பெரும்பயன் விளையாத சமயச் சடங்குகளிலும் பிறவற்றிலும் அருமையான பொருளை வாரி இறைக்கின்றார்கள். நமது நாட்டில் அறத்திற்கெனப் பயன்படும் பொருளுக்கோ ஓரளவில்லை. அப்பொருளின் மிகுதிப்பாகமும் தமிழர்களுடையனவே. எத்துணை செலவாகியும் தமிழ் மக்களுள் வறுமையும் அறியாமையும் ஒழியவில்லை. அவர்கள் மொழியும் சமயமும் வலிகுன்றி வளம்படா தொழிகின்றன. இதனை இச்சங்கத்துப் பேரறிஞரும் பெருஞ்செல்வரும் உள்ளத்திற்கொண்டு செய்யற்பாலனவற்றை விரைவிற் செய்யவேண்டும்.

தமிழ்நாட்டில் வாழ்வார்களெல்லாரும் தமிழர் என்ற பெயர்க் குரியாரெனினும், தமிழ்ப்பற்றும், பண்டைத்தமிழர் நாகரீகத்தைப் போற்றும் ஆர்வமும், இல்லாதவர்கள் உண்மைத் தமிழர் ஆகார். ஆரியமொழியையும் ஆரியநாகரிகத்தையும் மட்டுமே பெரியவாகப் போற்றும் மக்கள் உண்மைத் தமிழர் ஆகார். ஆரியத்திலும் பிறமொழியிலுமுள்ள நலங்களை நாம் இகழவேண்டியதில்லை. தமிழர் தம்முடைய மொழியையும், சமயத்தையும் பாதுகாத்தல் வேண்டும். தமிழர் தம்முடைய மொழியும் தம்முடைய சமயமும் தனி மாண்புடையனவென் றுணரவேண்டும். தமிழ் மொழியில் ஆரியமும் பிறவும் கலந்திருந்தல் போலத், தமிழர் சமயத்திலும் ஆரியக் கொள்கைகளும் பிறவும் கலந்திருக்கின்றன. அதுபற்றித் தமிழர்க்குத் தனிச் சமயம் இல்லை

யென்று கூறுதல் தவறு. நாம் நம்முடைய வுணவை அந்நிய நாட்டுப் பாத்திரங்களில் வைத்துண்ணுதல் போல நம்முடைய சமயக் கருத்துக்களை ஆரிய மொழிகளால் குறித்து வழங்குகின்றோம். தமிழரும் ஆரியரும் கலந்தமையான், தமிழ் நாகரிகத்தின் பெரும் பகுதியை ஆரியர் கைக்கொண்டனர் எனவும், ஆரியச் சொற்களின் பெரும் பகுதியைத் தமிழர் கைக்கொண்டனர் எனவும், டாக்டர். ஜில்பர்ட்சி லேற்றர் என்பவர் அறுதியிட்டுரைத்தனர்.

தமிழருடைய சமயம் அறுவகைப்பட்டது. கடவுளை உலகத்தைப் படைக்கும் ஓங்கார தெய்வமாக வழிபடுதல் பிள்ளையார் வணக்கமாகும். பேன்ப வடிவமான குழந்தைத் தெய்வமாக வழிபடுதல் முருகன் வழிபாடாகும். இறைவனைத் தாதையுந் தாயுமாக வழிபடுதல் சிவமும் சத்தியுமாக வழிபடுதலாகும். இறைவனது சத்தியை ஆண் வடிவமாக வழிபடுதல் திருமால் வணக்கமாகும், இத் திருமால் வணக்கமும் மும்மூர்த்திகளுள் ஒருவராகிய விட்டுணு வணக்கத்தோடு கலப்புற்றுத் தன் வடிவம் இழந்து விட்டது. அதனால், சைவமும் வைணவமும் வேறாயின. இப்போது சைவரும் வைணவருமாயிருக்கின்ற தமிழ் மக்கள் யாவரும் தங்கள் பண்டைச் சமயம் ஒன்றேயெனக்கொண்டு திருவள்ளுவனார் கூறிய பொது நெறியைத் தழுவி நடத்தல் அவர்களுடைய ஒற்றுமைப்பாட்டிற் கேதுவாதும். வெவ்வேறு தெய்வங்களை வழிபடுபவர்க்கு அத்தெய்வங்கள் வாயிலாக முழுமுதற் கடவுள் பயனளித்தலால், அங்ஙனம் வழி பட்டுப் பயன் பெற்றோர் தாம் வழிபடுந் தெய்வங்களைப் பெரிதாகப் பேசுதல் இயல்பே. பிறப்புடைய தெய்வத்தை வழிபடுவோர் பிறப்பில்லாத கடவுளினும் அதனைப் பெரிதாகப் பேசுதல்பற்றி அவர்கள் பேச்சு முற்றிலும் மெய்யென்று கொள்ளுதற்கிடமில்லை. "எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்ற திருவள்ளுவர் கட்டளையின்படி தமிழ் மக்கள் நடந்து கொள்ள வேண்டும். வீரர் செய்யுஞ் செயல்களை இறைவன் செயலென்று கூறுதல் ஒரு வகையாற் பொருத்தமாயினும், அவ்வீரரும் கடவு

ளும் ஒரு தன்மையரே யென்று கொள்ளுதல் பெருந் தவறு கும். புராணங்களுள் உயர்வு நவிற்சிக் கெடுத்துக் காட்டா யும், பொருத்த மில்லாதனவாயு முள்ளனவற்றை உண்மை யென்று கொள்ள வேண்டியதில்லை. புராணங்களால் தெரிந்து கொள்வது யாதெனின், கடவுள் அன்பர்க் கருள் செய்வாரென் பதே. அன்பர்க்காக இறைவன் அற்புதச் செயல்கள் நிகழ்த்து தல் கூடும். அற்புதங்களை இயற்கைச் சட்டத்தின் வலியினை மாற்றவல்ல உயரிய நுண்ணிய சட்டங்கள் பல கடவுளருளால் தொழில் செய்கின்றன வென்பது நுண்ணிய அறிவாளர்க்கு நன்கு புலனாகும். கனமில்லாத காற்றில் கனமான வானவூர்தி செல்லுமென்பதை நேரே பாராதவர்கள் அதனை நம்பாதிருக்க லாம். அதனால், அவர் நம்பிக்கை தக்கதென்று இக்காலத்திலே யார் சொல்லுதல் கூடும்? அவ்வாறே அற்புதச் செயல்களுமாம். இதுகாறுங் கூறியவாற்றால், தமிழரது சமயத்தின் தன்மை யின்ன தென்பது சுருக்கமாக விளங்கியிருக்கும். தமிழர் சமயமென்பது ஒரே முழுமுதற் கடவுளைச் சுட்டிறந்த முறையிலும், சுட்டியறி யும் பல்வகை வடிவ வாயிலாகவும், வழிபடும் நெறி யென்பதை யும், தமிழ் நாகரிகத்தைத் தழுவி நடக்கும் அருளொழுக்க முடைய மக்களனைவரும் தமிழர் என்னும் ஒரு பெருங்கூட்டத் தாராவர் என்பதையும், நம்மவர் யாவரும் தத்தம் உள்ளத்திற் பதியவைத்துக் கொள்ளவேண்டும். இவ்வுணர்ச்சி யில்லாமை யால், சாதிக்கேடுகளும் பிறவும் நமது சமயத்தைப் பாழாக்க லாயின. தமிழருள் பெருஞ் செல்வர்கள் பலர் தமிழினைப் பொருட்படுத்தாத ஒரு வகையாரையே தமக்குப் பெரியோரா கவும், ஆசிரியராகவும் கருதி, அவர்களுக்குத் தமது பொருளை ஏராளமாகக் கொடுத்துத் தமது மானத்தையு மிழக்கின்றார்கள். தம்மவர்கள் பசித்து வருந்துவதைச் சற்றும் உற்று நோக்குவ தில்லை. விரிந்த நோக்கமுடைய சைவசமயம் வேறு; சாதிப் பெருமை பாராட்டும் சுமார்த்த சமயம் வேறு. கடவுளை ஆண்டவனாகவும், உயிர்களை அடிமைகளாகவும் கூறும் சைவசமயம் வேறு; சுமார்த்த வேதாந்த சமயம் வேறு, என்று ஒவ்வொருவரும் உண்மை யுணரவேண்டும். திருநீறணிதல்

மாத்திரமே பற்றிச் சுமார்த்தரும் சைவரும் ஒரு சமயத்தவ ரென்று கொள்ளுதல் தவறு. திருநீறணியாத கிறித்துவரும் மகமதியரும் ஒரு சமயத்தவரா? பிற சமயத்தாராகிய கிறித்துவர்க்கும் மகமதியர்க்கும் நமது சமயச் சடங்குகளோடு யாதொரு தொடர்பும் இல்லாமை போலவே சுமார்த்த மதக் குருக்களாகிய பிராமணர்க்கும் சைவ சமயச் சடங்குகட்கும், யாதொரு தொடர்புமில்லை. சைவநெறி நிற்குந் தமிழர்கள் அன்னோரைக் கொண்டு சிரார்த்தம் பூசை முதலிய சடங்குகள் செய்விப்பதும், மேலுலகம் கிடைக்குமென் றெண்ணி அன்னோர்க்குச் சமயச் சடங்குகளில் பொன், நெல், பூ, ஆடை முதலியவற்றை ஏராளமாக வாரி வழங்குதலும், சத்திரங் கட்டி அன்னமிடுதலும், வடமொழி வேத பாடசாலை வைத்தலும், அனைய பிறவுஞ் செய்தல் பேதைமையாகும். தமிழ்ப்பெருஞ் செல்வர்கள் தம்மவர்களுள் வறுமையுந் தகுதியுமுடைய பல நன் மக்கட்கு, உண்டி, உடை, உறையுள், மருந்து, சமயக்கல்வி, தொழிற்கல்வி, மொழிப்பயிற்சி, முதலிய பல நன்மைகளுள் ஒன்றுவ தளித்தற்குத் தமது பொருளைச் சிறிதும் பயன் படுத்தாது பிறமக்களுக்கே அந்நன்மைகளைச் செய்வதற்குப் பெரிதும் முற்படுகின்றார்கள். 'ஏதிலார் ஆரத் தமர் பசிப்பர் பேதை—பெருஞ்செல்வ முற்றக் கடை'' என்ற நாயனார் திருவாக்கினை யுற்று நோக்குக. இதன் பொருள் அறிவிலானுக்குப் பெருஞ்செல்வம் வந்த காலத்தில் அச்செல்வத்தினை அவன் இனத்தாரல்லாத பிறர் நன்கு நுகரவும், அவன் இனத்தவர்கள் பசித்து வருந்தவும் நேரிடும் என்பதே. தமிழரது பேரினத்தைச் சார்ந்த மக்களது செல்வத்தினாலே ஏனை வகுப்பினர் பெருநலன் துய்க்கின்றார்கள்; சத்திரங்களிலும் சமாராதனைகளிலும், திருவிழா சிரார்த்த முதலிய சடங்குகளிலும், அன்னதானம் ஒருவகையார்க்கே செய்யப்படுகின்றது. அவ்வகையார் செல்வத்திற் குறைந்தவர்களுமல்லர், ஏனையோருள் உண்டி பெறுதற்குரிய ஏழை மக்களும் பலருளர். உமை யன்னையார் வளர்த்த 32 அறங்களுள்ளும் ஆதுலர்க்கன்னசாலை, ஓதுவார்க்குணவு, அறுசமயத்தோர்க்கு உண்டி, சிறைச்சோறு, மகச்சோறு என்னும் அறங்களே அன்னதானத்தின் சார்பாகக் காணப்படுகின்றன.

பிராமணர்க்கு உண்டியென்று யாண்டுங் காணப்படவில்லை. ஆதுலரென்பவர்கள் எளியவர்கள். "வறியார்க்கொன் றீவதே யீகை" யென்று நாயனர் கூறியபடி உடற்றிறமும் பொருளு மில்லாத ஏழைகளுக்கு அன்னதானஞ் செய்தலே அறமாகும். வேலை செய்யுந் திறமுடையவர்க்கு வேலை கொடுத்துக் கூலி கொடுத் தலே நலம். ஒரு வேலையுஞ் செய்யாது ஊரூராய்த் திரியும் போலித் துறவிகட்கும் பிராமணர்க்கும் அன்னதானஞ் செய்தல் தவறு. ஓதுவார்க் குணவு கொடுத்தல் அறமென்றமையான், கல்வி கற்பார்க்கு உணவளித்தல் நல்லதோர் செய்கையே. ஆனால், பயனற்ற கல்வி கற்பார்க்கு உணவளிப்பது நன்மை பயவாது. தமிழ்ச் செல்வர்கள் தமிழருக்குள் நற்கல்வியை வளர்க்கவேண்டும். தமிழ் மக்களுள் பலர் இக்காலத்திலே கல்வி கற்பதில் மிகவும் பின்னிற்பவர்கள். அவர்களுக்குள், கல்வி பரவுவதற்கு வேண்டிய முயற்சிகள் செய்வதே பேரறமாகும். தம் மினத்தவர்களுள் எளிய மாணவர்க்கு, உணவும் கல்வியும் ஈயாது, சுமார்த்த சமயத்தினரது கல்விக்குப் பணஞ் செலவழித்தல் பொருத்த மில்லாத செய்கையாம்: அக்கல்வியால், தமிழர்க்கு யாது பயனுங் கிடையாது. தமிழ் மொழி வளர்ச்சிதான் குன்றும். தமிழர் சமயம் சாதிக் கொடுமையாய் மேலுமேலுங் கெட்டொழியும். பிறர் ஆங்கிலக் கல்வி கற்பதற்காகப் பணஞ் செல வழிப்பதால், தமிழ்ச் செல்வரும் அவர் இனத்தவரும், இம்மையிலும் மறுமையி லும் யாதொரு பயனும் அடைவதில்லை. தம்மவர்கள் கற்க மாட்டார்களென்றும், அன்னியர்களே கற்பார்களென்றும் தப்பாக எண்ணிக் கொண்டு அறிவில்லாத பல தமிழ்ச் செல்வர் கள் அன்னியர் கல்வின் பொருட்டுத் தம் பொருளைச் செலவு செய் கிறார்கள்; தமிழ் மக்களுள் கற்றவர்கள் பலர் ஆதிகாலந்தொட்டு இதுவரை திகழ்ந்தோங்கவில்லையா? இக்காலத்தே கற்பார் சிலரே யெனின், அதற்குக் காரணம் கல்வி வழியிற் பொருள் செலவழித்துத் தமிழ் மக்களை ஊக்கப்படுத்தாமையே யாகும். தமிழ் மக்கள் அறிவிலே குறைந்தவர்களல்லர். கற்கப் புகுந்து பரிசோதனைக் குட்பட்டுத் தேறியவர்களைக் கணக்கெடுத்தால் தமிழ் மக்களே பிறரினும் மிக்கவரென்பது வெளியாகும். பிறருள்,

நூற்றுவர் பரிசோதனைக்குச் சென்றால், இருபத்தைவர் தேறுவர். தமிழருள் பதின்மர் பரிசோதனைக்குச் சென்றால் ஐவர் தேறுவர். இதனால் கற்க முயலாதவர் தமிழருள் பலரென்பது வெளிப்படுவதுடன் கற்கப்புகின், கற்குந்திறமையில் அவர்கள் குறைந்தவரல்ல ரென்பதும் தெளிவாகும். ஆதலால், தமிழராய்ப் பிறந்து பெருஞ் செல்வம் பெற்ற வள்ளல்கள் தம்மினத்தவர்க்குக் கல்வியின் பொருட்டுப் பொருள் செலவழித்தல் இன்றியமையாத பேரறமாகும். நம்மவர்கள் சமயத்தைத் தழுவி நடக்க வேண்டுமாயின், உலக வாழ்க்கையில் வளம்பட வாழவேண்டும். வறுமையினைப் பெரியோர்கள் பெரிய நஞ்சென்பர். பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை யென்றது காண்க. உலக வாழ்வில் செம்மையடைதற் கேதுவாகிய கைத்தொழிற் கல்விக்கும் அயல் நாட்டிற் சென்று பல்வகைத் தொழில் கற்பதற்கும், வேண்டிய பொருளினைத் தமிழ் மாணவர்க்குத் தமிழ்ச் செல்வர்கள் வாரி வழங்குவதற்குப் பின் வாங்குதல் கூடாது. மொழிப் பயிற்சியும், சமய வுணர்ச்சியுமில்லாத வாழ்க்கை நாகரிக வாழ்க்கை யாகாது. ஆதலால், தமிழிலுள்ள பல கலைகளையும் நன்கு கற்றுத் தெளிவதற்குத் தக்க பெரிய கலாசாலைகள் நம்மவர்களால், நிலையிடப் பெறல்வேண்டும். தமிழிலே இலக்கண இலக்கிய நூல்கள் பலவுங் கற்றபின் சங்க விலக்கியம், பிற்காலத்துப் பெருங் காப்பியம், சைவ சித்தாந்த சாத்திரம், வைணவ நூல்கள், சித்தர் நூல்கள், சோதிட நூல்கள், வடமொழி, ஆங்கிலம் முதலிய பலவும் தனித்தனி நன்கு கற்பதற்கு வேண்டிய வசதிகள் செய்யப்படல் வேண்டும். தமிழ்க் கலாசாலை மாணவர்களுள் ஆங்கிலமும் வடமொழியுங் கற்க விரும்புகின்றவர்களுக்கு அக் கல்வியைப் பயிற்றுவித்தற் குரிய ஏற்பாடு செய்யவேண்டும். கல்வி யொழுக்கமில்லாத போலித் துறவிகளைத் தமிழ்க் கல்லூரிகளிலே கல்வி பயின்று நல்லொழுக்கம் கடைப்பிடிக்கச் செய்ய வேண்டும். அவர்களுள் கல்வி பயில இயலாதவர்கட்குச் சமய போதனையைத் தக்க அறிஞர்கள் வாயிலாக அளித்தல் வேண்டும். சமய போதனை ஏற்றுக்கொள்ளாதும் பணிவிடை செய்யாதும் வாளா திரிகின்ற போலி வேடத்தினர்க்கு உணவு, உடை, முதலி

யன கொடுத்தலால் பயன் யாதும் இல்லை. அது சோம்பலையும் தீயவொழுக்கத்தையும் வளர்ப்பதாக முடியும்.

இனி, நோய் நீக்கம் முதலிய காரணத்தின் பொருட்டு, தெய்வங்களுக்கு நேர்ந்து கொள்ளுகின்றவர்களிடை, தெய்வத்தின் பெயரால் ஏழைகளுக்குக் கல்வி கற்பித்தல், உணவு, ஆடை, இருப்பிடம் முதலியவற்றை யுதவுதல் என்பவற்றை நடத்துவதாக நேர்ந்து கொள்ளும் வழக்கம், மிகுதியாகப் பரவுமானால், நாட்டுக்குப் பெருநலன் விளையும். தெய்வங்களுக்குத் திருமுழுக்குச் சாத்துதல், அமுது படைத்தல், மாலை சாத்துதல் என்பன மாத்திரமே உவப்பாகுமென்று கொள்ளுதல் தவறு. ஏழைகளுக்கும் மெய்யடியார்க்கும் உதவி செய்தலும் தெய்வத்திற்கு உவப்பானதே. இதனை நம்மவர்கள் பலர் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். கடவுளின் பெயரால் பயன் கருதாது செய்யும் எவ்வகை யறமும் சால்புடையனவே. நம் பெருஞ்செல்வர்கள் நல்லறிஞர் கூறும் அறிவுரைகளை யேற்றுச் செய்யவேண்டிய அறங்களைச் செவ்விதிற் செய்தால், அளவற்ற பெரு நன்மைகளை நமது நாடு விரைவிற் பெற்றுப் பெருமதிப்புடையதாகும்.

கல்வியின் பொருட்டும், சமயத்தின் பொருட்டும் செய்ய வேண்டிய முயற்சியைத் தொகுத்துரைத்து இவ்வுரையை முடிக்கின்றும். இந்நாட்டிலேயுள்ள அறவாணராகிய பெருஞ்செல்வர் தமது நாட்டு ஏழைமக்கள் யாவர்க்கும் கல்வி பயிற்றுவதையே பெரிய அறமாகக் கருதல் வேண்டும். ஒவ்வொரு சிற்றூரினும் சிறந்த சிறுவர், சிறுமியர் பாடசாலையொன்று கட்டல் வேண்டும். அப்பாடசாலைகளிலே தக்க கல்வியறிவும், நல்லொழுக்கமும் சமயவுணர்ச்சியுமுள்ள போதகாசிரியர்களை நியமித்து அவர்கட்குப் போதிய அளவு ஊதியங்கொடுத்தல் வேண்டும். தக்க பாடங்களைப் பிள்ளைகளுக்குக் கற்பிக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும். உடற்பயிற்சியும் சமய வொழுக்கமும் நற்றமிழ்க் கல்வியும் அதற்குத் துணையாக ஆங்கிலக் கல்வியும் படிப்படியாக ஐந்து வயதுக்கு மேற்பட்ட சிறுவர் சிறுமியர்களுக்கு அளிக்கப்பட வேண்டும். நற்கல்வியில்லாத ஆசிரியர்களை நியமிப்பதால் பிள்ளை

களுக்குத் தவறாகிய வுணர்ச்சியும் குணக்கேடும் ஒழுக்கக் குறைவுமே ஏற்படும். நமது குழந்தைகளாகிய அருமைப் பயிர்களைத் தீய களைகள் கெடுத்துவிடா வண்ணம் தக்க முறையில் பாதுகாக்கவேண்டும். இப்பாடசாலைகளில் பத்து அல்லது பன்னிரண்டாண்டு வரை கல்வி கற்ற மாணவர்களுள் உயர்ந்த கல்வி கற்றற் குரியார்க்குத் தக்க தமிழ்ப்பெருங் கலாசாலை ஒவ்வொரு பெரிய ஊரிலும் நிறுவப்படுதல் வேண்டும். அக்கலாசாலைகளிற் கைத்தொழிற் பயிற்சியும் கற்பிக்கப்பட வேண்டும். அதில் கற்க வரும் ஏழை மாணவர்க்கு உண்டி, உடை, இடம், மருந்து முதலிய எவ்வகை யுதவிகளும் செவ்விதிற் பெறக்கூடிய கலாசாலை விடுதிகள் அமைத்தல் வேண்டும். அக் கலாசாலைகளிலே பலவகைக் கலைகளையும் கற்றற்குரிய வகுப்பு நியமங்கள் ஏற்படுதல் வேண்டும். கலாசாலையிற் கற்றுப் பரிசோதனையிற் றேறும் மாணவர்களைத் தமிழ்க் கல்லூரிகள் பலவற்றிலும் ஆசிரியராக நியமித்தல் வேண்டும். சமயநூல் கற்றவர்களுக்குத் தக்க சம்பளங்கொடுத்து நாடெங்கும் அவர்கள் வாயிலாகச் சமய போதனைகள் செய்விக்க வேண்டும். இன்னும், தக்க புலவர்களைக் கொண்டு ஆராய்ச்சிக் கழகம் ஏற்படுத்தல் வேண்டும். தமிழ் நாட்டிலே பலவிடங்களிலே அரிய ஏடுகளை ஒருங்கு சேர்த்து அவற்றைப் பரிசோதித்துச் செவ்வையாக எழுதுவித்து அச்சிடுதற்குரிய ஏற்பாடுகள் செய்யவேண்டும். பாட்டு வடிவமாயுள்ள அரிய நூல்களுக்குத் தக்க புலவர்கள் வாயிலாக உரையெழுதுவித்து அச்சிடுதல் வேண்டும். ஆங்கிலத்திலுள்ள அறிவியல் நூல்களைத் தமிழில் செவ்வையாக அமைத்துக் கொள்வதற்குத் தக்க தமிழ்ப் புலவர்களையும், ஆங்கில அறிவியல் நூல் வல்லாரையும் ஒருங்கு சேர்த்து உழைக்கும்படி நியமித்தல் வேண்டும். வடமொழியிலுள்ள பல சமயநூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தற்குரிய ஏற்பாடுகள் செய்யவேண்டும். தக்க தமிழ்ப்புலவர்களை நியமித்துக் கலாசாலை மாணவர்க்குப் பெரும்பயன் விளைக்கத்தக்க பாடப் புத்தகங்களை யெழுதுவித்தல் வேண்டும். இப்பொழுது வெளிவரும் பலவகைப் புத்தகங்களையும் வாசித்து அவற்றுள் தக்கன இன்னவென்றும்

தகாதன இன்னவென்றும் தீர்மானித்தற்குச் சிறந்த புலவர்கள் கூடிய கழகங்களை நிறுவுதல் வேண்டும். சித்த மருத்துவ நூல்களை நன்கு ஆராய்ச்சி செய்த புலவர்கள் வாயிலாகத் தமிழ் மருத்துவக் கல்வியைப் பரவச்செய்தல் வேண்டும். ஆரிய சோதிடத்தின் வேறாகத் தமிழச் சோதிடம் சிறப்பாக விளங்குதலால், அதன் பயிற்சி தழைத்தோங்குதற்குரிய கலாசாலைகள் நிறுவப்படல் வேண்டும். தமிழிலே அரிய ஆராய்ச்சித் திறம் வாய்ந்த நூல்கள் வெளியிடுவார்க்குத் தக்க ஆதரவளித்தல் வேண்டும். அயல் நாட்டிலே சென்று கைத்தொழிற்கல்வி கற்கும் ஆற்றலும், விருப்பமு முடையார்க்குப் போதிய பொருளுதவி செய்யவேண்டும். தமிழிலே தக்க அகராதிகளும், சரித்திர நூல்களும் எழுதுவித்தற்குரிய கலைநிலையங்கள் நிறுவப்படுதல் வேண்டும். தமிழ் மக்களுக்குப் பெரிதும் பயன்படக் கூடிய இசைக்கல்லூரிகள் அமைத்தல் வேண்டும்.

இனிச் சமயச்சார்பாகச் செய்யப்படும் திதி முதலிய சடங்குகளிலும், திருவிழாக்களிலும் செலவிடும் பொருளைச் சுருக்கி மேற்சொன்ன அறங்களுக்குப் பயன்படுத்துவதுடன், கோயிற் பூசனை புரிவார்க்குச் சமயக்கல்வி யளித்தல், ஏழைகட்குத் தொழிற்சாலை யமைத்தல், வழிப்போக்கர்க்கு இடவசதி யளித்தல், சிறுபிள்ளைகளுக்குப் பாற்சாலை யமைத்தல், இலவச மருத்துவசாலை யமைத்தல், இடிந்தொழிந்த திருக்கோயில்களைப் புதுக்குதல், தேவாரப் பாடசாலை யமைத்தல், சித்தாந்தக் கலாசாலை யமைத்தல், சமயவுண்மைகளை விளக்கும் துண்டுப்பத்திரிகைகள் வெளியிடுதல், ஊர்தோறும் நூல் நிலையமும் வாசகசாலையும் அமைத்தல், ஆங்கிலங் கற்கும் தமிழ் மாணவர்க்குச் சமயக்கல்வியும் ஒழுக்கமும் பயிற்றுதற் குரிய விடுதிகள் அமைத்தல், முதலிய பல்வகை உயர்ந்த அறங்களை மேற்கொண்டு நடத்தல் வேண்டும். இதுவரை கூறியதன் தொகைப் பொருளாவது :—சமரசப் பெருநூலாகிய திருவள்ளுவ நூலே பொது வேதமாகும். அப் பொது வேதத்தின் விரிந்த நோக்கத்திற்கும், கருத்திற்கும், மாறுபடாத நூல்களையும் கொள்கைகளையுமே தமிழ்மக்கள் கைக்கொண்டு போற்றவேண்டும். தமிழ்

நன்மக்களனைவரும் ஒன்றே குலம், ஒருவனே தேவன், நன்றே நந் தாய் மொழி என்ற ஒருமைப்பாடு மிக்க வுணர்ச்சி யுடையர் களாய், குலநலம் பாராட்டாது அறிவும் ஒழுக்கமும் பற்றியே மேன்மை தாழ்மை உளவாமெனக் கொண்டு ஒற்றுமை யெய் தல் வேண்டும். தமிழர் தம் மொழிச் சிறப்பையும், சமயப் பெருமையினையும் நாகரிகவுயர்வினையும் பொருட்படுத்தாத பிற நெறியாளரைத் தம்மினும் உயர்வாகக் கருதுதலும், அவர் கட்குச் சம்யத்தொடர்பான எவ்வகை வழிபாடு செய்தலும் பெருந்தவறாகும். தமிழருள் செல்வரும் அறிஞரும் ஒருங்கு கலந்து, சோம்பலையும் தீயவொழுக்கத்தையும் வளர்க்கும் அறங்களை அறவே கைவிட்டு, உலகவாழ்க்கையிலும் அருளொ ழுக்கத்திலும் தாய் மொழி வளர்ச்சியிலும் சமயவுணர்ச்சியிலும் முன்னேற்ற மடைதற்குரிய முயற்சிகளையும் அறங்களையுமே மேற்கொள்ளல் வேண்டும். அவைகள் சிறந்தோங்குதற்குரிய பல்தொழில் நிலையமும் பல்கலைக்கழகமும் அவற்றின் சார்பான கலாசாலைகளும் இந்நாட்டிலும் தமிழ் நாட்டின் பிறபகுதிகளிலும் நிறுவப்படல் வேண்டும். இவற்றிற்கெல்லாம் அடிப்படையான தமிழ்ப்பற்றும் சிவப்பற்றும் தமிழருட் பரவி நிலைபெற்றோங்கும் வண்ணம் முழுமுதற் கடவுளின் பேரருளை வழுத்துகின்றேன்.

---

# கற்கும் நூன்முறை

[யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரவர்கள் 'தமிழ்ப்புலமை' என்னுந் தலைப்போடு தமிழ் நூல்கள் கற்குமொழுங்கினை எழுதியவாறு முன் 8-வது பரலில் பதிப்பித்தனம். இப்போது யாழ்ப்பாணத்து வட கோவை சபாபதி நாவலரவர்கள் 'திராவிடப் பிரகாசிகை'யில் ஒழிபிய லின்கண் கூறிய 'கற்கும் நூன்முறை' என்னுந் தலைப்பினையுடைய பொருளும் இன்றியமையாததாகலான் அதனையும் பதிப்பிக்கின்றோம்.]

விதிப்படி வித்தியாரம்பஞ் செய்து நல்லாசிரியரை யடைந்து நற்றமிழ் நூல் கற்கப்புகும் நன்மாணாக்கர் முன்னர்த் தமிழ்

நெடுங்கணக்கு ஆய்ந்து கொண்டு ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி, முதலிய உலகநீதி நூல்களைக் கற்றுப் பின்னர் அவைகளின் பொருள்களை நன்று தெரிந்து கொள்க. அதற்குப் பின் நிகண்டு கற்று அது கூறுஞ் சொற் பொருளுணர்ந்து முதுமொழி வெண்பா, நீதிநெறி விளக்கம், நாலடி, ஆசாரக்கோவை முதலிய நீதி நூல்களைக் கற்று அவற் றின் பொருளையும் அவற்றின்கண் வரும் நிகண்டுச் சொற்களையும் நன்ருக அறிந்துகொள்க. அதற்குப்பின் சைவ நன்மாணுக்கர் சைவாசாரியர்பால் வைதிக சைவ சாத்திரம் ஓதுதற்கு வேண்டும் சைவ சம்ஸ்காரமும், வைணவ நன்மாணுக்கர் வைணவாசாரியர் பால் வைணவ நூல் ஓதுதற்கு வேண்டும் வைணவ சம்ஸ்காரமும் விதிப்படி பெற்று, முறையே பஞ்சாக்கர அட்டாக்கர மந்திர தந்திர செப அனுட்டான முடையராய், தேவாரந் திருவாசகம் நாலாயிரப் பிரபந்தம் என்னுந் தமிழ் வேதங்களைப் பன்முறை யாகவுஞ் சுத்தாங்கமாகவும் ஓதப் பழகிக்கொள்க.

அதன்மேல், நல்லியற்புலவர் இயற்றிய தமிழ் இலக்கணச் சுருக்கங் கற்றுக்கொண்டு, திருவிசைப்பா, திருமந்திரம், திருப் பல்லாண்டு, பதினொராந் திருமுறைப் பிரபந்தங்கள், குமரகுருபர முனிவர் பிரபந்தங்கள், சிவப்பிரகாச முனிவர் பிரபந்தங்கள், சிவஞான யோகிகள் பிரபந்தங்கள், அவர் மாணுக்கர் பிரபந்தங் கள் முதலியவைகளையும், பெரிய புராணம், கோயிற்புராணம், காஞ்சிப்புராணம், தணிகைப்புராணம், திருவிளையாடற்புராணம், பிரமோத்தரகாண்டம், காசிகண்டம், பிரபுலிங்க லீலை, பாகவதம் முதலிய தமிழ்ப் புராணங்களையும், இராமாயணம், பாரதமென் னுந் தமிழ் இதிகாசங்களையும் முறையாற்கேட்டு, இலக்கியவறிவு ஈட்டிக்கொள்க. அதன்மேல், நன்னூல், இலக்கண விளக்கம், யாப்பருங்கலம், காரிகை, அகப்பொருள் விளக்கம், புறப்பொருள் வெண்பாமாலை, வெண்பாப்பாட்டியல், தண்டியலங்காரம், வீர சோழியம், நேமிநாதமென்னும் இலக்கண நூல்களை அவற்றின் காண்டிகை விருத்தியுரைகளோடு உளங்கொளக் கற்று, கற்ற இலக்கியங்களில் இப் பஞ்சலக்கண நூல் விதிகள் அமைவர நன்று

நன்மக்களனைவரும் ஒன்றே குலம், ஒருவனே தேவன், நன்றே நந் தாய் மொழி என்ற ஒருமைப்பாடு மிக்க வுணர்ச்சி யுடையர் களாய், குலநலம் பாராட்டாது அறிவும் ஒழுக்கமும் பற்றியே மேன்மை தாழ்மை உளவாமெனக் கொண்டு ஒற்றுமை யெய்தல் வேண்டும். தமிழர் தம் மொழிச் சிறப்பையும், சமயப் பெருமையினையும் நாகரிகவுயர்வினையும் பொருட்படுத்தாத பிற நெறியாளரைத் தம்மினும் உயர்வாகக் கருதுதலும், அவர்கட்குச் சமயத்தொடர்பான எவ்வகை வழிபாடு செய்தலும் பெருந்தவறாகும். தமிழருள் செல்வரும் அறிஞரும் ஒருங்கு கலந்து, சோம்பலையும் தீயவொழுக்கத்தையும் வளர்க்கும் அறங்களை அறவே கைவிட்டு, உலகவாழ்க்கையிலும் அருளொழுக்கத்திலும் தாய்மொழி வளர்ச்சியிலும் சமயவுணர்ச்சியிலும் முன்னேற்ற மடைதற்குரிய முயற்சிகளையும் அறங்களையுமே மேற்கொள்ளல் வேண்டும். அவைகள் சிறந்தோங்குதற்குரிய பல்தொழில் நிலையமும் பல்கலைக்கழகமும் அவற்றின் சார்பான கலாசாலைகளும் இந்நாட்டிலும் தமிழ் நாட்டின் பிறபகுதிகளிலும் நிறுவப்படல் வேண்டும். இவற்றிற்கெல்லாம் அடிப்படையான தமிழ்ப்பற்றும் சிவப்பற்றும் தமிழருட் பரவி நிலைபெற்றோங்கும் வண்ணம் முழுமுதற் கடவுளின் பேரருளை வழுத்துகின்றேன்.

---

# கற்கும் நூன்முறை

[யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரவர்கள் 'தமிழ்ப்புலமை' என்னுந் தலைப்போடு தமிழ் நூல்கள் கற்குமொழுங்கினை எழுதியவாறு முன் 8-வது பரலில் பதிப்பித்தனம். இப்போது யாழ்ப்பாணத்து வடகோவை சபாபதி நாவலரவர்கள் 'திராவிடப் பிரகாசிகை'யில் ஒழிபியலின்கண் கூறிய 'கற்கும் நூன்முறை' என்னுந் தலைப்பினையுடைய பொருளும் இன்றியமையாததாகலான் அதனையும் பதிப்பிக்கின்றோம்.]

விதிப்படி வித்தியாரம்பஞ் செய்து நல்லாசிரியரை யடைந்து நற்றமிழ் நூல் கற்கப்புகும் நன்மாணாக்கர் முன்னர்த் தமிழ்

நெடுங்கணக்கு ஆய்ந்து கொண்டு ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி, முதலிய உலகநீதி நூல்களைக் கற்றுப் பின்னர் அவைகளின் பொருள்களை நன்று தெரிந்து கொள்க. அதற்குப் பின் நிகண்டு கற்று அது கூறுஞ் சொற் பொருளுணர்ந்து முதுமொழி வெண்பா, நீதிநெறி விளக்கம், நாலடி, ஆசாரக்கோவை முதலிய நீதி நூல்களைக் கற்று அவற் றின் பொருளையும் அவற்றின்கண் வரும் நிகண்டுச் சொற்களையும் நன்றாக அறிந்துகொள்க. அதற்குப்பின் சைவ நன்மாணாக்கர் சைவாசாரியர்பால் வைதிக சைவ சாத்திரம் ஓதுதற்கு வேண்டும் சைவ சம்ஸ்காரமும், வைணவ நன்மாணாக்கர் வைணவாசாரியர் பால் வைணவ நூல் ஓதுதற்கு வேண்டும் வைணவ சம்ஸ்காரமும் விதிப்படி பெற்று, முறையே பஞ்சாக்கர அட்டாக்கர மந்திர தந்திர செப அனுட்டான முடையராய், தேவாரந் திருவாசகம் நாலாயிரப் பிரபந்தம் என்னுந் தமிழ் வேதங்களைப் பன்முறை யாகவுஞ் சுத்தாங்கமாகவும் ஓதப் பழகிக்கொள்க.

அதன்மேல், நல்லியற்புலவர் இயற்றிய தமிழ் இலக்கணச் சுருக்கங் கற்றுக்கொண்டு, திருவிசைப்பா, திருமந்திரம், திருப் பல்லாண்டு, பதினொராந் திருமுறைப் பிரபந்தங்கள், குமரகுருபர முனிவர் பிரபந்தங்கள், சிவப்பிரகாச முனிவர் பிரபந்தங்கள், சிவஞான யோகிகள் பிரபந்தங்கள், அவர் மாணாக்கர் பிரபந்தங் கள் முதலியவைகளையும், பெரிய புராணம், கோயிற்புராணம், காஞ்சிப்புராணம், தணிகைப்புராணம், திருவிளையாடற்புராணம், பிரமோத்தரகாண்டம், காசிகண்டம், பிரபுலிங்க லீலை, பாகவதம் முதலிய தமிழ்ப் புராணங்களையும், இராமாயணம், பாரதமென் னுந் தமிழ் இதிகாசங்களையும் முறையாற்கேட்டு, இலக்கியவறிவு ஈட்டிக்கொள்க. அதன்மேல், நன்னூல், இலக்கண விளக்கம், யாப்பருங்கலம், காரிகை, அகப்பொருள் விளக்கம், புறப்பொருள் வெண்பாமாலை, வெண்பாப்பாட்டியல், தண்டியலங்காரம், வீர சோழியம், நேமிநாதமென்னும் இலக்கண நூல்களை அவற்றின் காண்டிகை விருத்தியுரைகளோடு உளங்கொளக் கற்று, கற்ற இலக்கியங்களில் இப் பஞ்சலக்கண நூல் விதிகள் அமைவர நன்று

பயில்க. இதுகாறுங் கூறிய இவ்விலக்கிய இலக்கண நூலுரைகள் முறையால் உளங்கொளக் கற்றுத் தமிழ்ப்புலமை யெய்திய நன்மாணுக்கர் இளந்தமிழ்ப் புலவர் (Intermediate) என்னுங் கல்விப் பட்டாபிதானத்துக்கு உரியரென்றுணர்க.

அதன்மேல், தொல்காப்பிய எழுத்ததிகாரஞ் சொல்லதிகாரம் பொருளதிகாரங்களை இளம்பூரணம், சேனாவரையம், நச்சினார்க்கினியம் என்னும் உரைகளோடு நன்று கற்று, சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, சூளாமணி, நைடதம், இரகுவமிசம் என்னுந் தமிழ்க் காவியங்களை உரைகளோடு நன்று ஆராய்ந்து கொள்க.

அற்றேலஃதங்ஙனமாக;

"சேக்கிழார் சிந்தா மணிப்பயிற்சி தீதெனவே
தூக்கியுப தேசித்தார் சோமேசா—நோக்கிற்
பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்"

என்று ஆசிரியர் சிவஞானயோகிகள் அருளிச்செய்தலின், சிந்தாமணிப் பயிற்சியும், சிந்தாமணி யென்றது உபலக்கணமாகலின் அதுபோலுஞ் சிலப்பதிகாரம், மணிமேகலை, சூளாமணிப் பயிற்சியுஞ் சைவ வைணவ நன்மாணுக்கர்களுக்கு ஆகாவெனின்,—அஃதொக்குமன்னாயினும், சிந்தாமணி முதலிய காவியங்களிற் பொதுவான உலகியல், நீதி, வைராக்கியங் கூறப்படுதலானும், தொல்காப்பிய இயற்றமிழ்ப் பிரயோகம் மிக வருதலானும், அப்பயன் நோக்கிச் சைவ வைணவ நன்மாணுக்கர் அவையுங் கற்கற்பாலரென்று எடுத்தோதினும். இனிச் சைவ வைணவ நன்மாணுக்கர் அக்காவியங்களைக் கற்கவேண்டின், தத்தஞ் சமய சித்தாந்தப் பார்வையாற் கற்க. ஆத்தன் நூல்களிற்போல் அவற்றின்கண் அழுந்தற்க வென்பார், "சிந்தாமணிப் பயிற்சி தீது" என்றார். பயிறல்—பலகால் உளங்கொள அழுந்தி ஆராய்தல். மனம் ஒன்றில் அழுந்தின் அதன் வண்ணமாய் மாறுமென்பது அநுபவமாகலின், வேதப்புறமாய அவ்வாருகத பௌத்த காவி

யங்களிற் பலகால் அழுந்திப் பயில்வோர் தம் வைதிகநெறி கை விட்டு அவை கூறுங் கொள்கை வசத்தராய் அவைதிகராவரென் பது பெரியோர் கருத்தென்க. வைதிக காவியங்களின் இயல்பும், அவைதிக காவியங்களின் இயல்பும் "வைதிக காவியதூடண மறுப்பில்" விரித்தோதினும்.

அதன்பின், தருக்கசங்கிரக தீபிகை, தருக்கபரிபாடை கற் றுத் தருக்க அறிவுடையராகுக. அதன்மேல், இறையனார் அகப் பொருளுரை, பிரயோக விவேகவுரை, இலக்கணக் கொத்துரை, தொல்காப்பியச் சூத்திரவிருத்தி, இலக்கணவிளக்கச் சூறாவளி யென்பவற்றை மதியமையக் கற்று இலக்கணவறிவு விரியச்செய்து கொண்டு, பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, கல்லாடம், பெருந்தே வனார் பாரதமென்னுஞ் சங்க விலக்கியங்களை அவற்றுரைகளோடு ஆராய்ந்து, பின்னர்த் திருக்குறள், திருக்கோவை யென்னும் தெய்வ இலக்கியங்களைப் பரிமேலழகியாருரை, பேராசிரியருரை களோடு அறிவமையப் பலமுறை நன்றாராய்ந்து தமிழ்ப்புலமை நிரப்பிக்கொள்க.

இன்னும், தமிழ்ப் பெரும்புலமைக்கு இன்றியமையாத வட மொழி இலக்கிய இலக்கண ஆராய்ச்சியும், பூகோள ககோள கணித நூலாராய்ச்சியும், தருக்க நூலாராய்ச்சியும் ஈட்டிக் கொள்க. இதுகாறுங் கூறிய நூலுரைகளை இவ்வாறு கசடறக் கற்று முதிர்ந்த நன்மாணாக்கர் முதுதமிழ்ப் புலவர் (B. A.) என்னும் பட்டாபிதானத்துக்கு உரியரென்றுணர்க.

இங்ஙனம் தமிழிலக்கண இலக்கியம் முதலிய வித்தைகள் கற்று முதிர்ந்தோருள் சைவ நன்மாணாக்கர், சைவாசாரியரை யடைந்து வழிபட்டு மந்திராதிகாரம், அர்ச்சனாதிகாரம், யோகாதி காரங்களை நன்று பயக்குஞ் சைவ சமய விசேட தீக்கையுற்று, சைவசமயநெறி, சிவதருமோத்தரம், பரமததிமிரபானு, ஞானா மிர்தம், தத்துவப்பிரகாசம், சோமசம்பு சிவாசாரியர் கிரியா காண்டக் கிரமாவலி, சித்தாந்த சாராவலி என்பனவற்றையும், சதுர்வேத தாற்பரிய சங்கிரகம், சிவதத்துவ விவேகம், சிவ கர்ணாமிர்தம், பாரத தாற்பரிய சங்கிரகம், இராமாயண தாற்

பரிய சங்கிரகம், பிரமதருக்கத்தவம் என்பனவற்றையும் கற்று, வைதிகசைவ அறிவுடையராய், வைதிக சைவானுட்டானங் கை வரப் பயின்றுகொள்க. சுத்தாத்துவிதிகளான சித்தாந்தசைவ நன்மாணுக்கர் கைவல்லியம், வேதாந்த சூடாமணி முதலிய கேவ லாத்துவித வேதாந்த சாத்திரங்களைக் கற்கவேண்டின், தஞ் சித் தாந்தப் பார்வையாற் கற்க. இது விசிட்டாத்துவித வைணவ நன்மாணுக்கர்களுக்கும் ஒக்கும்.

சைவ நன்மாணுக்கருள் சித்தசுத்தி மிகவுடையராய் நித்தியா நித்திய விவேகவுணர்வு தோன்றிப் பிறவிக்கு அஞ்சி வீடுபேற்றின் அவா மிக்குடைய பரிபாகிகளான நல்லோர், சித்தாந்த சைவ ஞானா சாரியரை யடைந்து வழிபாடாற்றி அகங்கார மமகாரத் தியாகஞ் செய்து, நிருவாண விஞ்ஞான தீக்கையுற்று, சிவஞானபோதம் சிவஞானசித்தி, சிவப்பிரகாசம், திருவருட்பயன் முதலிய அத்து வித சைவசித்தாந்த நூல்கள் பதினான்கையும் அவற்றின் உரைக ளோடும், வேதாந்த சித்தாந்த சாத்திரப்பொருள் அனைத்தையும் ஐய விபரீதமற அடக்கி விளக்கும் சகலகலா ரூபமான சிவஞான மாபாடியத்தினோடும், ஞானாசாரியரை வழிபட்டு, முறையாற் கேட்டல் சிந்தித்தல் தெளிதல்செய்து, சிவானுபவங் கைவருமாறு சிவோகமென்னும் அத்துவித நிட்டை பேணுக. இங்ஙனம் ஞானா திகாரிகளான நல்லோர் ஈசாவாசியம், கேனம், பிரச்சினம், முண்டகம், மாண்டூக்கியம், தைத்திரியம், ஐதரேயம், சாந்தோக்கி யம், பிருகதாரணியகம், சுவேதாச்சுவதரம், கைவல்லியம், அதர்வ சிரசு, அதர்வ சிகையென்னுஞ் சைவோபநிடதங்களையும், பவுட்க ரம், மிருகேந்திரம், தேவிகாலோத்தரம், சருவ ஞானோத்தரம் முத லிய சைவாகமங்களையும் தாம் கற்றுணர்ந்த வேதாந்தத் தெளிவான திராவிடசைவ சித்தாந்தப் புலமைக்கு அரணாக ஆய்ந்துணர்ந்து கொள்க. ஈண்டுச் சொல்லிய உபநிடதங்களின் மெய்ப்பொருள்கள் ஆண்டாண்டுத் துவித விசிட்டாத்துவித கேவலாத்துவித பாடிய வுரைகளாற் பேதிக்கப்பட்டிருத்தலின் சைவ சித்தாந்த ஞானகுரு வருளுபதேச மாந்திரப் பார்வையால் அவற்றின் மெய்யுணர்ந்து சுத்தாத்துவித நிலைக் கடைப்பிடி உறுதி யுறுக.

அதன்மேல், இங்ஙனங் கூறிய வேதாந்தத் தெளிவான சைவ சித்தாந்த ஞானுனுபவ தெய்வத்திருவருள் இலக்கியமான தேவாரந் திருவாசகந் திருக்கோவை உத்தரவேதம் முதலிய திருமுறைகளைத் திருவருட்கண்ணுல் என்றும் ஆராய்ந்து ஓத, பரமசிவன் திருவடிக்கீழ்ப் பிரிவறப் பொருந்துஞ் சீவன்முத்தி யுண்மை நிலை தலைக்கூடி வாழ்க.

வைணவநல்லோர் தத்துவசேகரம், தத்துவத்திரயம், சீவசனபூரணம் முதலிய தஞ் சமயசாத்திரம் முறையாற் கேட்டுச் சிந்தித்து விசிட்டாத்துவித சித்தாந்தந் தேறி, நாலாயிரப் பிரபந்தங்களைத் திருவருட் பார்வையான் என்றும் ஆராய்ந்து, நாராயணமூர்த்தி திருவடிக்கீழ் இருக்குஞ் சரணுகதிநிலை தலைக்கூடி வாழ்க.

மேற்கூறிய முதுதமிழ்ப் புலமையோடு இங்ஙனம் கூறிய வேதாந்த சித்தாந்த சாத்திரப்புலமையும் நன்கு கைவரப்பெற்ருர் முதுதமிழ்ப் பெரும்புலவர் (M. A.) என்னும் பட்டாபிதானத்துக்கு உரியரென்றுணர்க.

---

# உண்மைநெறி விளக்க ஆசிரியர்

## உமாபதி சிவாசாரியரா ?

உண்மை நெறி விளக்கம் சைவ சித்தாந்த சாத்திரம் பதினுன்கனு ளொன்ருகக் கருதப்பட்டு வரும் ஆறு திருவிருத்தங்களாலாய ஒரு ஞான நூல். உமாபதி சிவாசாரியர் அருளிச்செய்ததாக அச்சிட்ட பிரதிகளனைத்திலுங் காணப்படுவது.

சென்னை சிந்தாதிரிபேட்டை கொ. ஷண்முகசுந்தர முதலியார் கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியர் இயற்றிய '**சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம்** என்னும் சித்தாந்தாஷ்டகத்தை உரையுடன் பதிப்பித்துள்ளார். இரண்டாம் பதிப்பு கலி 4996 ஜயஹூ தைமீ

வெளிவந்தது. இந்நூற்கு முன்னுரை எழுத வந்தவர் இஃது உண்மை நெறி விளங்கக் கூறிய தென்றுரைத்து "அது கொடிக் கவி கூறியபின் அவ்வா றநுஷ்டித்தோர்க்குச் சிறிது ஞானந் தோன்றி அத் திருவருண்ஞானத்தின் வழியே பாசநீக்கஞ் சிறிதுற, அது முற்றிலு நீங்கிச் சிவப்பே ரின்பெய்துமாறு யாங்ஙனமென வினவ, ஆசிரியர் உலகவழக் கின்பே போன்று பாசமிலா நெஞ்சுவிடு தூது கூறிப் பாசநீக்கமும் பதிப்பேரின்பு மடையுமாறு தெளிவிக்க, அதனையுணர்ந்த மாணாக்கர் அதனை மேன்மேலு மநுஷ்டித்துப் பயனடையுமாறு வினவ, அதனைத் தசகாரிய வகையா லெளிதிலுணருமாறு விளக்கிக்கூறிய திவ் வுண்மைநெறி விளக்கமாகும். அன்றியும், சிவஞானபோத உண்மையினையும் ஆகமங்களினுண்மையினையும் உண்மை விளக்கமாகத் தமது பரமாசிரியர் மாணாக்கர் மனவாசகங் கடந்தார் விளக்கிக்கூறியதே போல் தாமு மவ்விரண்டையும் விளக்கி உண்மை நெறி விளக்கமாகக் கூறினர். எவ்வாறெனில், மாயை ஆன்மா சிவமென்னு முத் தத்வ ரூபங்களை ஆராய்தலும் அதனைத் தரிசித்தலும் தரிசித்தவற்றில் மயக்கஞ்செய்வதைச் சுத்திசெய்தலும் சுத்திசெய்த பின் னுண்டான ஆனந்த வின்பத்தை யனுபவித்தலு மென வொவ்வொன்றிற்கும் மும்மூன்று வகையாக ஒன்பது வகை காட்டி யிவ்வாறுய்ந்து சிவத்துடன் தான், போகித்திருத்தலே பயனெனவும் இதுவே தசகாரியமெனவும் கூறினர். அதுவே தத்வரூபம், தத்வ தரிசனம், தத்வசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோக மென்பதாகும். அன்றியும், உண்மை - ஆகமவுண்மையை, நெறி - வழியாக, ஒழுங்காக, விளக்கம் - விளக்கிக் கூறியது உண்மைநெறிவிளக்க மென்பதூஉமாம்" என்றனர். அவரே சங்கற்ப நிராகரணத்துக்கு முன்னுரை எழுதப் புகுந்து தமிழ்நூற் சைவ சித்தாந்த சாத்திரம் பதினான்கெனத் தொகுத்த தென்னையெனக் கடாவெழுப்பி அதற்கு விடையிறுப்பவர் பதினான்கும் ஒன்றன்பின் ஒன்றாக வைக்கப்பட்டதற்குக் காரணம் விளக்கினர். இறுதியில், "இப் பதினான்கு நூல்களு மொரேவழியா யொன்றன்பின் னொன்றாய்ப் பக்குவத்துக்குத் தக்கபடி ஞான

பாதமொன்றையே போதித்து வேதாகம உண்மையினை வெளியாக்குதலா லிவற்றைச் சித்தாந்த சாத்திரம் பதினான்கெனத் தொகுத்தனர்" என்றுரைத்து அப்பதினான்கின் பெயரையு முணர்த்துஞ் செய்யுள் ஒன்று காட்டினர்.

உந்தி களிறு வுயர்போதஞ் சித்தியார்
பிந்திருபா வுண்மை பிரகாசம்—வந்தவருட்
பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
வுண்மைநெறி சங்கற்ப முற்று.

இவ்வெள்ளைச் செய்யுள் எக்காலத்து யாரால் செய்யப்பட்டதென்பது விளங்கவில்லை. சித்தாந்த சாத்திரம் பதினான்கென்பதற்கும் அவை இன்ன இன்ன வென்று தெரிந்து கொள்ளற்கும் ஏதுவாயிருப்பது இஃதாகலின் இதன் பழமையை யாராய்ந்து தெளிதல் ஒரு தலையாக வேண்டப்படுவது.

இனி, என்னிடத்திலுள்ள பழைய ஏட்டுச்சுவடிகளி லொன்று சித்தாந்த சாத்திரங்களின் மூலபாடங்களைத் தருவது. அதனுள், சிவஞான போதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம், திருவருட்பயன், இருபாவிருபது, வினாவெண்பா, கோடிக்கவி, நெஞ்சுவிடு தூது, போற்றிப்பஃறொடை, சங்கற்ப நிராகரணம், உண்மை விளக்கம், திருவுந்தியார், திருகளிற்றுப்படியார், துகளறு போதம் இவற்றின் மூலபாடங்கள் முறையே எழுதப்பட்டுள்ளன. இறுதியில் "மெய்கண்ட சாத்திர முற்றும்" என்று எழுதப்பட்டுளது. தலையேட்டில் இப்பெயர்களையே எழுதி "ஆக மெய்கண்ட சாத்திரம் கச" என்றெழுதப்பட்டுளது. வேறொரிதழில் சதமணிக்கோவையையுஞ் சேர்த்து "ஆக மெய்கண்ட சாத்திரம் கரு" என்றெழுதப்பட்டுளது. இச்சுவடியில் உண்மைநெறி விளக்கம் மெய்கண்ட சாத்திரங்களுட் சேர்க்கப்படாமை வெளிப்படை. ஆயினும் பெரியார் பலர் அச்சிட்ட பிரதிகளுக்கு மாறாயிருத்தலால் என் ஏட்டுச்சுவடி தவறுரைத்ததென்றே நிச்சயித்துவிட்டேன். சீகாழி வித்வான் ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளையவர்களைப் பார்க்க நேர்ந்த காலத்து அவர்

கள் உண்மைநெறி விளக்கம் உமாபதியார் செய்ததா என்பது ஆராயற்பாலது என்றும், தம்மிடத்துள்ள ஏட்டுப் பிரதிகளிலும் பிற பெரியாரிடத்தும் திருமடங்களிலும் தாம் கண்ட பிரதிகளிலும் அது தத்துவநாதரெனபாரொருவர் செய்ததென்பதற் காதாரமான வெண்பா இறுதியில் காணப்படுகின்றதென்றும் உரைத்தனர். யானும் என்னிடத்துள்ள சித்தாந்த சாத்திர மூல பாடப் பிரதியில் **உண்மைநெறி விளக்க** மில்லாமையையும் **துகளறுபோதம்** பதினான்காவதாகக் காணப்படுவதையுங் குறிப்பித்தேன். அவர்கள் அது பொருத்தமானதே என்றனர். பின் இருவேமுமாக என்னிடத்துள்ள வேறோரேட்டுச்சுவடியை நோக்குங்கால் அதனுள் **உண்மைநெறி விளக்கச் சிந்தனையுரை** யென்னும் **உண்மைநெறிவிளக்க** வுரை எழுதப்பட்டிருந்ததையும் அதனிறுதியில் அவர்கள் குறித்த வெண்பா வரையப்பட்டிருந்ததையும் கண்டேம். இவற்றோடமையாமல் அவர்கள் துரைத்தனத்தார் கையெழுத்துப் புஸ்தகசாலையிலு மாராய்வோமென்று குறிப்பிக்க, இருவேமு மங்குச் சென்று **உண்மைநெறிவிளக்கப்** பிரதிகளையெடுப்பித்து நோக்கினேம். அங்கு மூலப்பிரதியொன்றும் உரைப் பிரதி யொன்றும் உள்ளன. மூலப்பிரதி யிறுதியிற் காணப்படும் வெண்பா கையெழுத்துப் பிரதிகளின் விளக்க ஜாபிதாவில் [Vol. 3.] காட்டப்பட்டுளது.

எண்ணு மருநூலே யெழுதி யுணர்வார்க்கு
வுண்மை நெறிவிளக்க மோதின[ர்](ன்)—வண்ணமிலாத்
தண்காழி தத்துவனார் தாளே புனைந்தருளு
நண்பாய தத்துவநாதன் றான்.

அன்றியும், ஒரு குறிப்புங் காணப்படுகின்றது. "இந்நூல் சைவ சித்தாந்த சாஸ்திரம் பதினான்கனுள் ஒன்று. பாயிரம் நீங்க ஆறு விருத்தங்களை யுடையது. தத்துவரூபம்....சிவபோகம் என்னும் தசகாரியங்களையும் நாடிக் கண்டு சிவானுபூதி கூடுமாறு சீகாழித் தத்துவனார் திருவடி ஸம்பந்தியாகிய தத்துவநாதனால் இயற்றப் பெற்றது." உரைப்பிரதியில் இவ் வெண்பாக் காணப்படவில்லை. அதற்குக் குறிப்பு : "இந்தப் பிரதியில் இந்நூல் உரையுடன்

முற்று மிருக்கிறது. உரையாசிரியர் இன்னாரெனத் தெரியவில்லை. ஏடுகள் சிதைந்துள்ளன. அச்சுப்பிரதியில் உள்ள உரையினும் இவ்வுரை வேறானது." என்னிடத்திலுள்ள உரைப்பிரதியிலுள்ள உரை வேறு. அதனிறுதியில் இவ் வெண்பாவிற்கு உரையும் காணப்படுகிறது. வெண்பாவிலும் பாடபேத முண்டு.

எண்ணு மருநூ லெளிதி னறிவாருக்
குண்மை நெறிவிளக்க மோதினான்—வண்ணமிலாத்
தண்காழித் தத்துவனார் தாளே புனைந்தருளும்
நண்பாய தத்துவநா தன்

என்பது பாயிரம். இதன் பொருள்: மாயாவுருவின்றிச் சச்சிதானந்த சொரூபியாய்க் குளிர்ச்சி பொருந்திய காழிநகர்க்குத் தத்துவனான தத்துவனார் தமது சீபாதங்களையே சிரசிலே சூட்டியருளும் விருப்பத்தைப் பெறுகின்ற தத்துவநாதனென்னுந் திருநாமத்தை யுடையோன் தமதாசிரியர் கருதிச் செய்யுமாகம சித்தாந்தமா முப்பதவசரத்தையும் எளிதாக வறியும் பக்குவ ஆன்மாக்களுக்கு ஆறு திருவிருத்தத்திலே பத்தவசரமாகத் தொகுத்து உண்மைநெறி விளக்கமென்னும் திருநாமத்தினையுஞ் சாத்தித் திருவுளம் பற்றினான் என்றவாறு.

பின்னும் அவ்வுரை "துகளறுபோத முப்பதவதரமும் உண்மைநெறி விளக்கம் ஆறு பாட்டினுந் தசகாரியமா; யடங்கி வருவதற்கு வகை" யெனத் தொடங்கி வகையை விரித்தலால் தத்துவநாதனார்க்கு ஆசிரியராகக் குறிக்கப்பட்ட தத்துவனார் **துகளறுபோத** ஆசிரியராகிய சீகாழிச் சிற்றம்பல நாடிகளோ அவரோடு நெருங்கிய சம்பந்தமுடைய பெரியா ரொருவரோவாதல் வேண்டுமென் றூகிக்கக் கிடக்கின்றது. அவர் சிற்றம்பல நாடிகளின் மாணாக்கர் அறுபத்துமூவருட் டலைமை பெற்ற தத்துவப் பிரகாசரே யென்றும் அன்னாருள் ஒருவராகிய தத்துவநாதர் அவரையுங் குருவாகக் கொள்ளல் இயல்பேயென்றும் வித்வானவர்கள் உரைக்கின்றார்கள்.

இனி உண்மைநெறி விளக்கம் உமாபதி சிவாசாரியர் அருளிச்செய்ததென் றுரைத்தற்கு என் மனம் எவ்வாறு துணியும்? என்னிடத்திலும், வித்வானவர்களிடத்திலும், அவர்களுக்குத் தெரிந்த பலவிடங்களிலும், கையெழுத்துப் பிரதிப் புஸ்தக சாலையிலுமுள்ள ஏடுகட்கு மாறுயுள்ள ஏடு ஷண்முக சுந்தர முதலியார் முதலிய பதிப்பாளர்க்கு எங்குக் கிடைத்ததென்பது புலப்படவில்லை.

---

# சைவ எல்லப்ப நாவலர்

## பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| ௩௪௧ | 21 | செப்ப | செப்பு |
| ௪௱௬ | 2 | இராக்ஷ | இராக்ஷச |
| ௸ | 17 | ௸ | ௸ |
| ௪௱௭ | 1 | கிருந்த | கிரந்த |
| ௸ | 14 | மகாத்மியத்தை | மாகாத்மியத்தை |
| ௸ | ௸ | மகேச்வர | மாகேச்வர |
| ௪௱௮ | 18 | மியம்பவேன் | மியம்புவேன் |
| ௪௱௯ | 2 | மகாத்மிய | மாகாத்மிய |
| ௪௭௯ | 20 | உல்கத்தின் | லேங்கத்தின் |
| ௪௮௰ | 3 | சுவேத, கேது, | சுவேதகேது, |
| ௪௮௨ | 20 | வறியா | வறியாம |
| ௪௮௪ | 17 | சிவனுக் | இவனுக் |
| ௪௮௫ | 29 | டைடந்தது | னடந்தது |
| ௪௮௮ | 14 | யுள்களும் | யுள்களுள்ளும் |
| ௸ | 19 | ஏற்பட்டது | முற்பட்டது |

---



பாடாண் டிணை

# பாடாண் டிணை

## [இளவழகனுர்]

உலகம் ஒருநிறையாத் தான்ஓர் நிறையாப்
புலவர் புலக்கோலால் தூக்க—உலகு அனைத்தும்
தான்வாட வாடாத தன்மைத்தே தென்னவன்
நான்மாடக் கூடல் நகர்.

(பரிபாடல், மதுரை, க.)

'உலகம் ஒரு நிறையாகத் தான் ஒரு நிறையாகப் புலவர்கள் தமது அறிவென்னு நிறைகோலால் நிறுக்குங்கால், உலகமுழுவதூஉம் மெலிந்து மேலேறத் தென்னவனது நான்மாடக்கூடலென்னு நகரம் அங்ஙனம் மெலியாத தன்மைத்தாய்ப் பொறையாகிக் கீழ் நோக்கிற்று.'

தான், நான்மாடக்கூடல்; 'நான்மாடக்கூட'லென்றது, மதுரைமாநகரம். 'புலவர் புலக்கோலால் தூக்க' வென்றமையின், உலகுக்கும் நகருக்கும் நிறையென்றது, ஈண்டு வளமையும் வாழ்வும் முதலிய பெருமையினையென்று கொள்க. உலகென்பது மதுரையை யொழித்து நின்ற ஏனைய இடங்களாம். தான் வாட வென்ற விடத்துத் தானும், தன்மைத்தே யென்பதில் ஏயும் அசைகள். தென்னவன், பாண்டியன்; தென்னவனது புகழைக் கூறுதற்கெழுந்த இந்தப் பாட்டு அவன்றன் ஊரைப் புகழ்தலின், இது புகழ்ச்சிக்கண் ணெழுந்து ஊரடுத்து வந்தபாடாண் பாட்டாகும். இங்ஙனம் ஊர் முதலியன அடுத்து வரும் பாடாண் பாட்டுக்களெல்லாம் ஆசிரியர் "வழக்கொடு சிவணிய வகைமை யான"* வென்று நிறுத்திய புறனடை நூற்பாவினுற் கொள்ளப்படும். இவ்வியல்பினை ஆசிரியர் நச்சிஞர்க்கினியர் அந்நூற்பாவுக் குரைக்கும் உரையினுல் அறிக.

உண்மை யுணர்வும் நடுவு நெஞ்சமும் செவ்விய நாவும் படைத்த புலவர் பெருமக்கள் வாகை சூடிய அரசனுக்கு உல

* தொல், புறத், நக.

கத்தின் நிலையாமையை எடுத்துக்காட்டி மெய்யறிவு கொளுத்தினராகலின், அரசனும் அயல் நாடுகளைக் கைப்பற்றி ஆளுதற்கு மேன்மேலும் பெருகி யெழுகின்ற தனது பேரவாவினைக் கெடுத்துக்கொண்டு அன்று முதல் அறவொழுக்கத்தில் தலைப்பட்டான். தன் நாட்டுக் குடி மக்களுக்கு ஏதோ ரிடையூறும் வராதபடி பாதுகாத்து, அவர்களை இன்பத்திற் படிவித்தலிலேயே அவன் கண்ணுங்கருத்துமா யிருந்தான். மேலும் அரசன், பகைப்புலங்களின்மேற் படையெடுத்துச் சென்று பல வள நாடுகளைத் தனக்குரிமையாகக் கைப்பற்றி வந்தனனாகலின், இப்போது அவன் நாட்டில் முன்னையினுஞ் செல்வஞ் சிறந்தது. எனவே நாடு செழித்துக் குடிபெருகி அவனுக்கு எங்கும் புகழ் மிகுந்தது; மிகவே, அவன் தன தாட்சியின் நிலைமையும், நாடு குடி முதலியவற்றின் நிலைமையும் அறிய விரும்புவன்; அப்போது புலவர்கள் அவன்பாற் சென்று, அவ்வவற்றின் நிலைமைகளை யெடுத்துக் கூறிப் புகழ்ந்து பாடுவர். அன்றி, அரசன் இவ்வாறு செல்வமும் புகழுமுடையனாய் அரசு வீற்றிருக்கின்றமையால், அவனுட்டகத்துப் புலவரும் பிறரும் அவன் மாட்டுப் பரிசில் பெறச் செல்வர். செல்கின்றவர் அவனுடைய அருமை பெருமைகளை எடுத்துப் புகழ்ந்து பாடாநிற்பர்; இங்ஙனம் பாடிப் புகழுமொழுக்கமே 'பாடாண்டிணை' யெனப்படுமென்க. 'பாடாண்' என்பது பாடப்படும் ஆண்மகனது ஒழுகலாறு. இது வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. எனவே அவ்வொழுகலாற்றைப் பாடு மியல்பு 'பாடாண்டிணை' யெனப்பட்டதென்க. அரசன் அவரிசைக்கும் புகழை விரும்பிக்கேட்டு அவர்க்கு நிறையப் பரிசில் வழங்குவான்.

பாட்டென்பது அடர்ந்த கருத்துக்களும் புலம் வியக்கும் அழகுகளும் அமைந்து அழியாத இயற்கை வாய்ந்து சுருங்கிய வடிவிற் றிகழ்தலாலும், கையாளுதற்கு அஃது எளிதாயிருத்தலும் பண்டைக் காலத்துத் தண்டமிழ்ப் புலவர்கள் பெரும்பாலும் பாட்டெழுதுவதையே வழக்கமாய் மேற்கொண்டிருந்தார்கள். சிறுபான்மை உரையும் எழுதுவர்; எனினும் அங்ஙனஞ் சிறுபான்

மையாய்ப் பயின்று வந்த உரையும் பாட்டினியற்கையே பொருந்தி உரைச்செய்யுளாகவே அஞ்ஞான்று இயலாநின்றது. இவ்வியல்பினைப் 'பாக்கள் மொழி தோற்றின சொல்வகையானும் உரையாம் என்றவாறு. அஃதாவது வழக்கின்கண் ஒரு பொருளைக் குறித்து வினவுவாரும் செப்புவாரும் கூறும் கூற்று. அதுவும் இலக்கணம் பிழையாமற் கூறவேண்டுதலானும் ஒரு பொருளைக் குறித்துச் செய்யப்படுதலானும் செய்யுளாம்' * என்று ஆசிரியர் இளம்பூரணர் தெரிந்துரை செய்யுமாற்றால் அறிந்து கொள்க. ஆகையால், பண்டைக்காலத்தில் விளங்கிய நல்லிசைப் புலவர்களின் ஆழ்ந்தகன்ற உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்து நின்றது செய்யுளே யாகுமென்பது நன்கு தெளியப்படும். இச் செய்யு ளெழுதுவது அவர்களுக்கு எளிதாகவே யிருந்தது. பழந்தமிழ்ப் புலவர்கள் தாம் ஆராய்ந்தறியும் பொருள்களை அமைத்துவைத்தற் குரிய கருவியாகவே இச்செய்யுளைக் கருதி வந்தனராகலின், அவர்கட்கு இக்கருவியின் ஆராய்ச்சி அத்துணை உழைப்பினை விளைவித்தலில்லை; மற்று அவர்கள் உள்ளத்தைக் கவர்ந்து அரியபெரிய உழைப்புக்கு ஈர்த்துச் சென்றதெல்லாம் அக் கருவியின்கண் அமைக்கப்படும் பொருளாராய்ச்சியேயாகும். ஆசிரியர் தொல்காப்பியனார் தமது அருமந்த மெய்ந்நூற் பெட்டகமாகிய தொல்காப்பியத்துட் 'செய்யுளிய' லென ஒன்று வகுத்து ஆராயுமிடத்து, அதன்கண் அவர் வெறுஞ் சொன் முடிபுகளையும் சொற்றொடர் முடிபுகளையுமே எடுத்து ஆராய்ந்துகொண்டிராமற் புலவர்கள் ஆராய்வதற் குரிய பொருளாராய்ச்சிகளுக் கேற்பவே செய்யுளியற்கையை வகைபட வைத்து அப் பொருள் விளக்கத்தோடு அதனை ஆராய்ந்து செல்லலானும், அத் தொல்காப்பியத்தின் வழிவந்த எல்லாப் பழந்தமிழிலக்கியங்களும் அங்ஙனமே பொருளிலக்கண முனைப்புத் தோற்றி இயற்றப்பட்டிருத்தலானும் பண்டைக்காலத்துத் தமிழ்ப் பெரும்புலவர்களின் நாட்டத்துக்கும் உழைப்புக்கும் இடமாயிருந்ததெல்லாம் பொருளாராய்ச்சியே யாகுமென்பது நன்கு துணியப்படும். அப் பொருளாராய்ச்சிதானும் அகம்புறமென்று

* தொல், செய்யுள், கஎங.

இருபிரிவினதாய்ப் பலவகையானும் ஆராயப்பட்டு வந்தது. ஆகவே அவர்கள் தாங் காணும் உலகத்துப் பொருள்களைப் பல படவகுத்தாராய்ந்து, அவற்றைச் செய்யுளென்னுங் கொள்கலத்தில் இட்டு வைப்பாராயினர். இவ்வாறே அவர்கள் ஆராயும் பொருள்களும் இயற்றுஞ் செய்யுட்களும் பண்டைக் காலத்தில் இயன்றுவந்தன வென்க.

இன்னும் பண்டைக்காலத்துச் செந்நாப் புலவர்களிடத்தில் 'உள்ளதை உள்ளவாறே கூறுதல்' என்னும் அரும்பெருந் தன்மை நன்கமைந்திருந்தது. தமக்கு வேண்டுமானால் ஒருவரை நிலைக்குமேல் உயர்த்துப் புகழ்தலும்; வேண்டாரானால் அந் நிலைக்குக் கீழ்த் தாழ்த்து இகழ்தலும் அக்காலத்துப் புலவர் பெருமக்கள்பாற் காண்டலரிது. மேலும், அப்புலவர்கள் எதனையும் அல்லது எவரையும் பொருளறிவு என்னுங் கண்கொண்டு ஆராய்ந்து தமது ஆராய்ச்சியிற் காணப்படும் முடிபை அது காணப்பட்டவாறே செய்யுளிலிட்டு எழுது நீரராகலின், அவரியற்றுஞ் செய்யுட்கள் ஒவ்வொன்றும் பிற்காலத்து மாணவர்கள் நினைதொறும் ஆராய்ந்து பொருளறிவு நிரம்புதற்குரிய ஒவ்வோர் ஆராய்ச்சி யுரையேயாகும். அவ்வாறான பழம்புலவர்களின் அரிய ஆராய்ச்சியுரைகளே, தமிழ்மக்கள் செய்த தனிப்பெருந் தவத்தாற் பண்டிருந்தே தோன்றி இஞ்ஞான்றுகாறும் நின்று நிலவும் புறநானூற்றுச் செய்யுட்கள் முதலாயினவாம். இச்செய்யுட்கள் பண்டைக் காலத்திலிருந்த முடியுடை அரசர்கள், குறுநில மன்னர்கள், வள்ளல்கள், சீருஞ் சிறப்பும் பொருந்திய பெருங்குடிச் செல்வர்கள், சான்றோர்கள், உலகத்தில் அருஞ்செயல்கள் பல செய்து மிக்க புகழெய்தி வந்த வீரர் குடிமக்கள், கற்றோர்கள், நன்மக்கள் முதலியவர்களின் சிறந்த வரலாற்றுப் பகுதிகளும், அக்காலத்து வளநாடுகள் அந்நாடுகளின் பெருநகரங்கள் அந்நகரங்களின் அரும்பண்டங்கள் முதலியவற்றின் செய்திகளுங் காட்சிகளும் இக்காலத்தில் யாவரும் ஐயந் திரிபின்றிப் படக்காட்சியிற் காண்பது போல் அறிந்து கொள்ளுதற்குரிய அரிய கருவிகளாகத் திகழ்கின்றன. இன்னும்

ஆராய்ச்சியறிஞர்கள் ஆராய்ந்தறிதற் குரிய வானநூற் பொருள், நிலநூற்பொருள், உயிர்நூற் பொருள், உளநூற் பொருள், இயல் நூற்பொருள், செயல்நூற் பொருள், உடல்நூற் பொருள், மருத்துநூற் பொருள், அறநூற்பொருள், பொருணூற் பொருள், இன்பநூற் பொருள், கடவுணூற் பொருள், மொழிநூற் பொருள் முதலிய பல துறைப் பொருள்களையும் அச் செய்யுட்கள் தம்மைப் பயில்வார்க்கு எடுத்து மொழிந்து அவருணர்வைப் பெருக்கு கின்றன. பழங்காலத்திலிருந்த அரசர்களின் அரசாட்சி முறை களும், குடிகளின் வாழ்க்கை முறைகளும், கல்வியற நிலையங்கள் திருக்கோயில் முதலியவற்றின் நடக்கை முறைகளும், திருமணம் வழிபாடு முதலிய பழந்தமிழரின் அரிய பழக்க வழக்கங்களும், இல்லொழுக்கந் துறவொழுக்கம் முதலான ஒழுக்க நிலைகளும், அவ்வவற்றின் அடையாளங்களும் முதலாயின வெல்லாம் இஞ் ஞான்றுள்ளவர்கள் அறிந்து கொள்ளுதற்கு அச்செய்யுட்கள் அரும்பெருங் கருவிகளாய் நின்று உதவுகின்றன. சுருக்கமாய்க் கூறினல், ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டு விளங்கிய பழந்தமிழுலகத்தை நம் முணர்வுக்கண்களுக்கு அப் படியே நேர் நின்று விளக்கிக் காட்டும் நுண்பொருள் விளக்கப் படங்களென்றே அப்'புறநானூற்றுச் செய்யுட்கள்' முதலாயின வற்றை விரும்பிக் கூறலாம்.

ஆனால் பிற்காலத் தெழுந்த தமிழ்ப் புலவர்களின் செய்யுணி லையோ முற்காலத்து நிலைக்கு முற்றும் மாறுயின. கடந்த ஆயிரம் ஆண்டுகளாக இந்தத் தென்றமிழ் நாடு சமய நாடாக மாறலாயிற்று. பண்டைத் தமிழாசிரியன்மார் கைக்கொண்டு ஒழுகிவந்த கடவுளுணர்ச்சி சில ஏதுக்களால் தமிழ் மாந்தர் பால் நழுவவே, இவ் வாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சமய குர வர்கள் சிலரெழுந்து அக்கடவுளுணர்ச்சியை நன்கு விளக்கி ஆணித்தரமாய் நிலை நாட்டினர். அவரங்ஙனம் விளக்கி நிலை நாட்டுங்கால், அக் கடவுளுணர்ச்சி ஒன்றையே அஞ்ஞான்று சிறப் பாய் எடுத்து மொழிதலும் அவர் கடமையாயிற்று. அதுகண்ட தமிழ்மாந்தர்கள் அக்காலந் தொட்டுக் கடவுளுணர்ச்சி யொன்

றையே விடாப் பிடியாய்ப் பிடித்துக்கொண்டு, பண்டைத் தமிழாசிரியன்மார் காட்டிய வானநூற்பொருள் நிலநூற்பொருள் உயிர்நூற்பொருள் முதலான பிற பொருணூலாராய்ச்சிகளை அறவே கைவிட்டனர். அதனால் அவர்கள்பாற் பொருளறிவு குன்றிப் போயிற்று. ஆனால் சமயாசிரியன்மார் தம்மளவில் அப்பொருளறிவினாற் குன்றினாரல்லர். இவ் வுண்மை அவர்களியற்றிய நூல்களில் நன்கு துணியப்படும். மற்று அவரறிவைத் தமிழ்மக்கள் அறியுமுறையில் அறிந்தொழுகினா ரல்ல ரென்க. மாந்தர் அறிதற்குரிய பலவகையான பொருளாராய்ச்சிகளுள் இக் கடவுணூற் பொருளாராய்ச்சியும் ஒன்றென்று அவர்கள் தெளிந்திலர்; ஆனாற் பொருளாராய்ச்சி யென்பது கடவுணூற் பொருளாராய்ச்சி (சமயம், தத்துவம்) யென்ப தொன்றேதானென்றும், இது கற்ப தொன்றே மக்களாய்ப் பிறந்தார்க்குப் பயனென்றுந் தவறாய்த் துணிந்துவிட்டனர். புலவர்கள் பாடும் பாட்டுகளெல்லாங் கடவுட்பாட்டுகளே ஆயின. இவ்வாறு பொருளறிவு குன்றித் தவறான துணிவுகள் தமிழ் மக்கள்பால் ஏற்படவே, அவர்கட்கு அக் கடவுணூற்பொரு ளாராய்ச்சியிலும் நாளேற நாளேறக் குருட்டறிவு ஆராய்ச்சிகளுங் குருட்டுப்பிடி வழக்கங்களும் ஒன்றின்மே லொன்றாய்க் கிளைத்தெழுவவாயின. அதனால் அவர்கட்கு மெய்ப்பொருளுணர்வும் மழுங்குவதாயிற்று.

இங்ஙனமெல்லாம் பண்டைத் தமிழாசிரியன்மார் விளக்கிக் காட்டிய 'பொருளறிவும்', அவரை அடுத்துத் தோன்றிய சமயாசிரியன்மார் சிறப்பாயெடுத்து விளக்கிக்காட்டிய 'மெய்ப்பொருளுணர்'வுங் கெட்டு உணர்ச்சியற்ற வெறும் பழக்க வழக்கங்களே கடந்த ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழ்நாட்டிற் பெருகிப் பரவப்பரவ, அக் குருட்டு வழக்கங்களேதுவாகக் குருட்டடையாளங்களும் இவ்விரண்டினேதுவாக இனப் பிளவுகளுஞ் சமயப் பிணக்குகளும் மலிந்து முடிவில் ஒற்றுமைக் குறைவுக்கும் பல குழறுபடைகட்கும் நாட்டில் இடந்தந்து அவை தமிழ் மக்களைப் பாழாக்கிவிட்டன. இந்தச் சமயப் பிணக்குகள் முதலியவற்றை யொழித்தற்கு மீண்டுஞ் சமய குரவர்கள் எழுந்தனர்.

எழுந்தும் என்? அவர்கள் பரிந்து காட்டிய மெய்யுணர்வையுந் தக்காங்கு உணர்ந்துகொள்ளமாட்டாமல், தமிழ் மாந்தர் அவ ரறிவுரைகளினின்றும் பல குருட்டு வழக்கங்களை ஏற்படுத்திக் கொண்டு காலங் கழிப்பாராயினர். இவ்வளவிற்கும் ஏது, அவர் கள்பாற் பொருளறிவு குன்றிப் போனமையே யாகும். இது மட்டுமன்று; இப்பொருளறிவுக் குறைவினால் அவர்கள் நன் முறையிற் பொருளீட்டுதற் குரிய வழிதுறைக ளறியாராய் முயற்சி தவிர்ந்து வறிஞராயினர்;

இவ்வாறு நாடெல்லாம் வறுமையடைந் திருக்கும்போது புலவர்களின் நிலை எவ்வாறிருக்கும்? அவர்களும் நிலைமாறினர். நடுவு இகந்தனர். முன்னோர் மொழி பொருளை மறந்தனர். பய னற்றவரையும், புகழப்படுதற் குரியரல்லாதாரையும், கொடுக் கிலாதாரையும், ஏழை யெளியவர்களையுமெல்லாம் நிலைக்குமே லாக உயர்த்துப் புகழ்ந்து, ஆழ்ந்தகன்ற பொருளுஞ் சுவை நிரம்பிய சொல்லு மல்லாமற் பதரைப்போன்று வெறுஞ் சொற் குப்பைகளான பண்டை வழக்கில்லாச் செய்யுட்களையே நிரம்ப வியற்றிப் பாடி இரத்தல்தொழிலே செய்வாராயினர். தமக்குவேண் டாதாரைப் பழித்தும் பாடினர். இது கண்ட மெய்யறிவுச் சான் றோர் சிலர் இப்புலவர்களின் நிலைக்கு இரங்கிக் 'கொடுக்கிலாதா ரைப் புகழ்ந்து கூறினும் நமக்குக் கொடுப்பவர் எவருமில்லை; எல் லாம் வல்ல இறைவனைப் பாடினும் அவன் நமது நிலையை அறிந்து ஏதாயினும் அருள் செய்வன்' என்று அறிவுறுப்பாரா யினர். எனவே, தமிழ்நாடெல்லாஞ் சமய நாடாய் மாறிக் கடவுட் பாட்டுகளையே பெருக்கி வந்த கோட்பாடு, இவ் வறிவுறுத்தலினாற் பின்னும் வலுப்பதாயிற்று. 'பாட்டென்பது கடவுளைப் பாடுங் கருவி போலும்; உரையிலானால் மக்களைப் பற்றிப் பேசலாம் போலும்' என்னும் பிழையான எண்ணமுந் தமிழ்மக்க ளுள்ளத்திற் பதிவ தாயிற்று. இவ்வுணர்ச்சி, 'பாட்டுப் பாடுவதானால் அங்ஙனம் பாடப்படுபவர் தமக்குமேல் நிலையி லுள்ளவராயிருத்தல் வேண்டும், உரையிலானால் அங்ஙனம் உரைக்கப்படுபவர் தமக்குக் கீழ் நிலையி லுள்ளவராயும் இருக்கலாம்' என்னும் வேறொரு தவறான உணர்ச்

சிக்கும் இடந்தந்துவிட்டது. இவ்வாறான குருட்டுக் கோட்பாடு களினிடையில் உயிரற்ற பொருள்களைப் பாட்டா லெழுதுதலென் னும் வழக்கமே அற்றுப்போய் விட்டது. இவ்வாற்றாற் பண்டைக் காலத்துச் செந்தமிழ் வழக்கும், நல்லிசைப் புலமையும், மொழி யமைப்பும் பொருளறிவுங் கெட்டுப் பிற்காலத்துத் தமிழ்ப்புலவர் கள் நிலைமாறினர். அவர்களைக் குருட்டு வழக்கங்களும் விடாப் பிடியாய்ச் சூழ்ந்து கொண்டன வென்க. இனி இவர்கள் மேற் காட்டியபடி பண்டைச் செந்தமிழ் வழக்கும், புலமையும், மொழி யமைப்பும் பொருளறிவும் நன்கு வாயப்பெற்று முன் நிலைக்கு உயர்ந்து நாட்டுக்கு நலம் விளைப்பது நன்றாகும். இனி இவர்கள் செய்யுணிலையை நோக்கின், கடவுளொருவருக்கேதான் பாட் டெழுதல் வேண்டுமென்றும், மக்களில் எவரை வேண்டுமாயினும் நடுவு பிறழ்ந்து எப்படியும் பாடிவிடலாமென்றும் இருவகையான பிழைபட்ட கோட்பாடுகளினுஞ் சிக்குறாமல், பண்டைக்காலத்து நல்லிசைப் புலவர்களைப் போல் இஞ்ஞான்று காணப்படுந் தமிழ் நாட்டுக் காட்சிகளையும், வளநாடுகள், நகரங்கள், பொருள்கள், வாழ்க்கை முறைகள், தமிழ் நாட்டுச் செல்வர்களில் தக்கவர்களின் வரலாற்று நுட்பங்கள், கற்றோர் சான்றோர் முதலானவர்களின் வாழ்க்கை நுட்பம் பெருமை அருஞ்செயல் முதலானவைகள், தமிழக முழுவதூஉம் ஆங்காங்கிருக்குஞ் சிற்றரசர்கள் குறுநில மன்னர்களின் நாட்டெல்லைகள், அந்நாட்டுச் சிறப்புகள், அவரவ ராட்சிச் சிறப்புகள், புகழ்கள், நற்செயல்கள், இறைவனுடைய இயல்புகள் முதலாயினவற்றை உள்ளதுள்ளவாறே பழந்தமிழ்ச் செய்யுட்களைப் போல் நல்லிசைத் தமிழ்ப்புலவராயினோரில் அவர வர் சிற்சில இயற்றுதலும் நன்றாம். இவை வரலாற்று முறைச் செய்யுட்களாக விளங்கல் வேண்டும். பழைய தமிழ் நாட்டின் விளக் கப்படமான புறநானூறு முதலியவற்றைப் போல் இக்காலத்துத் தமிழ் நாட்டின் விளக்கப்படமாகச் சில செய்யுணூல்கள் எழுத லும், பிற்காலத்தார்க்கு ஓர் எடுத்துக்காட்டாகும். உரை நூல் களே பெரும்பான்மையும் எழுதப்படல் வேண்டு மென்பதுங் கால வியற்கையை நோக்கி மறுக்கப்படா தென்க. எனவே பழைய தமிழ்ப்புலவர்கள் மேற்கொண்டு வந்த பாடாண்டிணை யென்பது,

இக்காலத்தில் வழக்கற்று விடுதற்குரிய நிலையுடைய தன்றென்பது இதுகாறும் விளக்கியுரைத்தவாற்றால் நன்கு பெறப்படும்.

இனிப் பண்டைக்காலத்துப் பாடாணொழுக்கங்களை ஆராய்வாம். ஆசிரியர் தோல்காப்பியனார்,

"பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே
நாடுங் காலை நாலிரண் டுடைத்தே" *

என்று நூற்பாவியற்றிப் பாடாண்டிணையை எட்டு வகையாகப் பிரித்தோதுகின்றார். இவ் வெட்டுவகைகளையும் ஆசிரியர் நச்சினார்க்கினியர் வெட்சி முதற் காஞ்சியீறாக வருந் திணைகள் ஆறும் இவற்றின் பொதுவியலென ஒன்றும் பற்றிவரும் பாடாண் வகைகள் ஏழும், ஈண்டுப் பாடாண்டிணையிற் கூறப்படும் பொருட் கூறுபாடு ஒன்றும் ஆக எட்டுவகையாமென உரைதருவர். இனி ஆசிரியர் இளம்பூரணனார் அவற்றைக் 'கடவுள் வாழ்த்துவகை, வாழ்த்தியல்வகை, மங்கலவகை, செவியறிவுறுத்தல், ஆற்றுப் படைவகை, பரிசிற்றுறை வகை, கைக்கிளைவகை, வசைவகை, யென்பன' வென்பர். இவ் விருவேறு வகையான உரைக்கிளவிகளுள்ளும் இளம்பூரண ருரைக்கிளவி வகையே ஆசிரியரது உண்மைக் கருத்துக்கு இணங்கி நிற்பதாகும். தொல்காப்பியனார் 'பாடாண்டிணை யென்னும் பகுதி கைக்கிளைக்குப் புறனுமென்றும், நாடுங்காலை அது நாலிரண்டுடைத்'தென்றும் நூற்பா யாத்தனர். இதனாற் 'கைக்கிளைக்குப் புறனான பாடாண்டிணை யென்பது எட்டு வகைகளை யுடையது' என்னும் ஆசிரியர் கருத்து மிகவுந் தெளிவாய்ப் புலனாகா நின்றது. பாடாண்டிணை யென்னும் ஓரொழுக்கம் எட்டுவகையா மென இவ்வாறு நன்றாய்ப் புலனாகா நிற்பவும், நச்சினார்க்கினியர் அவ்வெட்டு வகைகளுட் பாடாண்டிணை யென்பது ஒன்றெனவும் ஏனைய எழுவகைகளாவன வேறு பிறவாமெனவும் உரைத்து, அவ்வேழு வகைகட்கும் வெட்சித்திணை முதலியவற்றைக் கொணர்ந்து கூட்டினார்; அங்ஙனங் கூட்டுங்கால் அவை வெட்சி வஞ்சி உழிஞை தும்பை வாகை காஞ்சி என ஆறேயாய்த்

* தொல், புறத், ௨௫.

தோன்றவும் பொதுவியலென வொன்றைத் தமக்கு வேண்டிய வாறே வலிந்தியைத்து ஏழாக்கிக் கூட்டி மொத்தம் எட்டெனக் கணக்கிட்டார். ஆசிரியர் தொல்காப்பியனார் பொதுவியலென வொன்று யாண்டுங் கொண்டனரல்லர்; அவர் வெட்சி முதலிய ஏழு திணைகளுள்ளும் பொதுவாய் வருஞ் சில கருத்துக்களை அவை சாரும் பகுதி தெரிந்து ஆண்டாண்டுஞ் சார்த்தி அவ்வவற்றின் புறனடைகளாக விளக்கிச் சென்றார்; இவ்வாறு தாம் பகுக்கும் பகுதிகளில் அடங்காமல் மேற்பட்டு வருங் கருத்துக்களை ஆங்காங்கும் இயைபறிந்து சார்த்திப் புறனடைகளிலிட்டு விளக்கிச் செல்லுதலே இலக்கணவாசிரியன்மார்க்கு மரபுமாம். தொல்காப்பியத்துள் இப்புறத்திணை யிலக்கணத்தின் மட்டுமேயன்றி எழுத்துச் சொல் லிலக்கணங்களினுங் கூட இவ்வாறு பொதுவிய லென்பதொன்று யாண்டுங் காணப்படாது. ஆனால் அவ்வெழுத்துச் சொல்லிலக்கணங்களைத் தங்கூற்று லெழுதிய பிற்காலத்து **நன்னூலார்** சொல்லிலக்கணம் விரிக்கும் அதிகாரத்திற் 'பொதுவிய'லென வொன்று நிறுத்தினார். இவ்வியைபி னியல்பினை யாம் இனி எழுதவிருக்கும் **'எழுத்திலக்கணக் கட்டுரைகள்' 'சொல்லிலக் கணக் கட்டுரைகள்'** முதலியவற்றில் விளக்கு மிடனறிந்து கண்டு கொள்க. ஈண்டு அது விரிப்பிற் பெருகும். மற்றுப் புறப்பொருட் பன்னிருபடல முடையாரும், அவர் வழி வந்தாருமே ஆசிரியர் தொல்காப்பியனார் ஆண்டாண்டும் புறனடையாக் கொண்டு விளக்கிய சில கருத்துக்களையும், அங்ஙனம் புறனடையாகக் கொள்ளாது வெட்சி முதலிய திணைப்பகுதிகளிலேயே விளக்கி நிறுத்திய கருத்துக்கள் சிலவற்றையும் ஒருங்கு சேர்த்துத் தமக்கு வேண்டுவன சிலவுங் கூட்டி விரித்துத் தம் புறத்திணை யிலக்கணங் களிற் பொதுவியல் எனவொன்று நிறீஇ விளக்குவாராயினர். இதுவன்றியும், இன்னார் 'ஒழி' பென வேறொன்று பகுத்து அதன் கண்ணுஞ் சில விளக்குவர். இவற்றி னியல்புகளையெல்லாம் இதற்கடுத்துவரும் 'பொதுவியற்றிணைக்' கட்டுரையில் நன்கு விளக்குவேம். எனவே ஆசிரியர் தொல்காப்பியனார் 'பொதுவிய' லென வொன்றுகொண்டு அதன்கண் வெட்சி முதலான எழுதிணை கட்கும் வேறாய் நிகழும் புதுக் கருத்துகளேதுங் கூறாமை தெரி

தலின், நச்சினார்க்கினியர் 'பொதுவிய' லென்றொன்று கூட்டிப் பாடாண்டிணை எட்டுவகையா மென்பதற்குக் கணக்கெண்ணிக் காட்டினமை ஒரு பெரும் வியப்பேயாகும். நூலாசிரியன்மார் காட்டுங் கருத்துக்களையும் அவர் கூறுங் கூற்றுக்களையுந் தமக்கு வேண்டியபடி யெல்லாம் சிற்சில விடங்களில் திரித்துத் திரித்துப் பிணைத்து மாறுபொரு ளுரைத்து மயங்க வைக்குந் திறத்தில் உரையாசிரியர் நச்சினார்க்கினியர்க்கு இணையானவர் எவரும் இரார்.

எனினும், அவருரை இல்லையாற் பழந்தமிழ்நூல்கள் பல வற்றிற்குப் பின்னையோரால் உரைகண்டு தெளிதலும் அரிதாய் முடிந்திருக்கு மென்க. எளிதிலே புலனாதற்கரிய நுணுக்கமான உரைக்கூறுகள் பல நச்சினார்க்கினிய ருரையகத்தில் ஆங்காங்குத் தோன்றி மிளிர்கின்றன. மேற்காட்டி விளக்கிய பாடாண்டிணை நூற்பாவின் உரையில் வெட்சி முதலிய திணைப் பொருள்களை வாளா நுதலி வரும் பாட்டுக ளுளவாயின், அவைதாமும் இப் பாடாண் பாட்டுகளைப் போலவே புலவராற் பாடப்படு வனவாயினும், அவைகள் உண்மையிற் பாடாண் பாட்டுக் ளாகா: ஏனென்றால், புலவர் தலைவன் புகழையாதல் அன் றித் தலைவன் புலவருரையையாதல் விரும்பும் விருப்பத்தால் அவை பாடப்படுவன வல்ல. அங்ஙனம் விரும்பிப் பாடப் படாமையின், அவை கைக்கிளைக்குப் புறனாகா; ஆகா தாகவே அவற்றைப் பாடாண்பாட்டுக ளென்பதும் அமையாது; ஆகையாற்றான் வெட்சி முதலான திணைகட்கு வேறாக இப் 'பாடாண்டிணை' யென்பதொன்று வகுக்கப்பட்டது என்றும், இனி வாளா தலைவனுடைய இயல்பு செயல் முதலியவற்றைப் பாடுதலேயன்றி, அவன்றன் வெட்சி யொழுக்கம் முதலியவற்றை யும் புலவர்கள் விரும்பிப்பாடுவராயின், அஞ்ஞான்று அவ்வெட்சி முதலிய திணைப்பொருள்கள் நுதலி வந்த பாட்டுக்கள் 'பாடாண் பாட்'டுக்களேயாகும்; ஏனென்றால் அவைகள் விருப்பம் ஏது வாகப் பாடப்பட்டமையினென்பது. அங்ஙனமாதலால், வெட்சிப் பொருள் நுதலி விருப்பத்தாற் பாடப்பட்ட பாட்டு 'வெட்சிப் பொருள் வந்த பாடாண்டிணை' யெனவும், வஞ்சிப்பொருள் நுதலி

விருப்பத்தாற் பாடப்பட்டது 'வஞ்சிப்பொருள் வந்த பாடாண்டிணை' யெனவும், இங்ஙனமே ஏனைத் திணைகள் நுதலி விருப்பம் ஏதுவாகப் பாடப்பட்ட பாட்டுகள் அவ்வத் திணைப் பொருள்கள் வந்த பாடாண்டிணைகளாமெனவும் உரைக்கப்படுமென்றும் ஆசிரியர் நச்சினார்க்கினியர் நுணுக்கமாய் எடுத்துரைத்த உரைக்கூறு பெரிதும் பாராட்டி மகிழற்பாலதாயிருக்கின்றது; இங்ஙனம் வருமிடங்களும் அவருரையிற் பலவென்க. இனி அவர் ஒவ்வொரு பாடாண் பாட்டில் இரண்டு முதலாகப் பல திணைப் பொருள்கள் நுதலி வருவனவும் உண்டென்று கூறி,

"முனைப்புலத்துக் கஃதுடை முன்னரைப்போல் வேந்தர்
முனைப்புலம்பு முன்னிரையும் வீசி—யெனைப்புலத்துச்
சென்றது மின்சீர்த்தி தேர்வளவ தெவ்வர்போ
னன்றுமுண் டாக நமக்கு."

என்று அதற்கொன்றெடுத்துக் காட்டி இது வெட்சியும் வாகையும் வந்த பாடாண்டிணை யென்று கூறுதலும் இங்கு நினைவுகூரற்பாலது. இவ்வாறெல்லாம் திணைப்பொருள்கள் நுதலி வரும் பாடாண்டிணைப் பாட்டுக்களே பதிற்றுப்பத்தில் வரும் நூறு பாட்டுகளுமா மென்றும் அவர் கூறுவர். இனி வெட்சி முதலிய திணைப்பாட்டுகளும் பிறவும் அரசன்பால் விருப்பமின்றியே வாளா வியல்பு கூறு முறையிற் பாடப்பட்டு வருங்கால், அப்பாட்டுகள் கைக்கிளைப் புறனாகாமை முகத்தாற் பாடாண்டிணையாகாமையின் அவைதம்மின் பொருளிலக்கணந்தான் என்னை யெனின், அஞ்ஞான்று அறுமுறை வாழ்த்தின்கட் காட்டப்படும் உலகியல் கூறலாய் முடியுமாகலின், அவை இறைவன்பாற் கைக்கிளை யொழுக்கம் புரிதலாய்க் கருதப்பட்டு மற்றதன் புறனாய் வருந் 'தேவபாடாண் டிணையாகு' மென் றுணர்ந்து கொள்க. என்று இதுகாறுங் கூறியவாற்றால், ஆசிரியர் இளம்பூரணர் எடுத்துக் காட்டியவாறு பாடாண்டிணை யென்பது 'கடவுள் வாழ்த்துவகை' முதலாக எட்டு வகைப்படுமென்றும், விருப்பம் ஏதுவாகப் பாடப்பட்டுக் கைக்கிளைப்புறனாய் வருங்கால், வெட்சி முதலான திணைப்

பொருள்கள் நுதலி வந்த பாட்டுக்களும் பாடாண்டிணைகளா மென்றுந் தெளியப்படுமென்க.

இனி இப் பாடாண்டிணை 'தேவ பாடாண்டிணை' 'மக்கட் பாடாண்டிணை'யென் றிருபெரும் பிரிவில் அடங்கும். 'தேவ பாடாண்டிணை' யென்பது எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளின் றிறங்களை விரும்பிப் பாடு மொழுக்கம்; இவ்வொழுக்கம், பண் டைக் காலத்தில் ஆண்டவனுடைய அருட்டன்மைகள் புலனாதற் குரிய உலகியற்கைகளைக் கூர்ந்தறிந்து பாடுதலின் வாயிலாகவே பெரும்பான்மையும் நிகழ்ந்து வந்தது. உலகியற் பொருள்க ளெல்லாம் மலத்தின் றிரிவுகளாகும்; மலத்திற்கு விளக்கம் இன்மையால், இவ் வுலகியற் பொருள்களுக்கும் இயல்பிலே விளக்கங் கிடையா. ஆயினும் இப் பொருள்களில் இறைவன் உறைந்து நிற்றலால் இவைதம்மி லெல்லாம் விளக்கங்கள் தோன்றுகின்றன. எடுத்துக் காட்டாக நெருப்பென்னும் ஒரு பொருளை எடுத்துக் கொள்வோம்; அது மலத்தினற் றிரிபெய் திய பொருளாதலின், அதன்கண் இயல்பிலே விளக்க மிருத் தற்கு இடமில்லை; ஆயினும் இறைவன் அதன்கண் முனைத்து நிற்றலின், அதனிடத்தில் ஓர் ஒளிவிளக்கம் உண்டாயிற்று; இங் ஙனமே தேனென்னும் பொருளும் மலத்தின் றிரிவாகலின், அதன்கண்ணும் இனிப்பென்னும் இனிய தன்மை இருத்தற்கு இடமில்லை. ஆயினும் ஆண்டவன் அதன்கண் உறைந்து நிற்ற லின், அவன்றனது அருட்டன்மையே அங்ஙனம் இனிப்புத் தன் மையாகப் புறத்தார்க்குப் புலனாகின்ற தென்க. இவ்வாறே எல்லா உலகியற் பொருள்களிலும் உணர்வு கவரும் நல்லியல் புகளாய் வெளிப்பட்டுத் தோன்றும் விளக்கங்களெல்லாம் உண் மையில் அவைதம்மிற் பொருந்தி மறைந்து விரிந்து கிடக்கும் முழுமுதற் கடவுளின் அருள் விளக்கங்களே யாகுமென்று தெளிந்து கொள்க.

"நின், வெம்மையும் விளக்கமு ஞாயிற்றுள
நின், தண்மையுஞ் சாயலுந் திங்களுள
நின், சுரத்தலும் வண்மையும் மாரியுள
நின், புரத்தலு நோன்மையு ஞாலத்துள"

என்று ஆசிரியர் **கடுவனிள வெயினனார்** திருமாலை விளித்துப் பாடிய **பரிபாடலிலும்*** இவ்வுண்மை வெளிப்படும். எனவே, பண்டைத் தமிழ்ப் பேராசிரியன்மார் உலகியற் பொருள்களைப் பாடுங்கால், அவைதம்மிற் காணப்படும் உணர்வு கவருந் தன்மைகளையே ஆண்டாண்டுஞ் சுட்டிப் பாடுவாராயினர். அங்ஙனம் பாடப்படும் பாட்டுக்களே இயற்கை முறை வழுவாத உண்மைப் பாட்டுக்களாகும்; இப்பெற்றி யுண்மையினைப் பழுத்தறிவும் முழுத்தமிழ்ப் புலமையும் வாய்ந்து திகழும் **ஆசிரியர் மறைமலை யடிகள்,** "எங்கெல்லாம் நமதுணர்வைக் கவர்கின்ற பேரழகு உலக இயற்கையிற் காணப்படுமோ அங்கெல்லாம் பாட்டு உண்டென்பது தெளியப்படும்"† என்று தெரிந்துரை செய்வராயின், அவரது நுண்ணிய நுழைபுல மாட்சியினை என்னென்பேன்! என்னென்பேன் !! இவ்வகையான பாட்டுக்களெல்லாம், உலகியற் பொருள்களின் இயற்கைத் தன்மைகளோடு புலவனறிவு ஒன்றுபட்டு நிற்ப, அஞ்ஞான்று அவன் அப்பொருள்களின் உண்மையை உள்ளவாறே பாடுகின்ற சீரிய முறையினால் அமைவனவாமென்க. இவ்வாறெழூஉம் பாடாண் பாட்டுகள், உலகியற் பொருள்களின் றன்மைகளையே எடுத்துப் பாடுவனபோற் பருப்பொரு ளறிவினர்க்கு விளங்குமாயினும், உண்மையில் அவைகள் ஆண்டவனுடைய அருட்டன்மைகளையே கிளந்தோதுவனவாக நுண்ணறிவினரெல்லாரும் உணராநின்றார். ஆகவே அவையனைத்தும் முழுமுதலிறைவனையே வழுத்துந் தேவ பாடாண் டிணைகளேயாயுந் திகழுமென்று தெளிக. "இறைவனைப் பாடும் பாட்டுக்களேயன்றி, இறைவனது படைப்பினையும் அப் படைப்பில் நிகழும் நிகழ்ச்சிகளையும் புனைந்துரைக்கும் பாக்களும் நல்லிசைப் புலவர்களால் ஆக்கப்படின், அவற்றோடொப்ப இனிமை மிக்கனவாயே திகழுமென உணர்ந்துகொள்க; அங்ஙனம் அல்லாக்கால் 'அகப்பொருள்' 'புறப்பொருள்'பற்றி யெழுந்த சங்கப்பாட்டுகளும், 'சிலப்பதிகாரம்' 'மணிமேகலை' போன்ற பெரும் பொருட்டொடர் நிலைச்

---

*பரிபாடல், ௪: ௨௫-௬௨. †முல்லைப்பாட் டாராய்ச்சியுரை, பக். ௪.

செய்யுட்களும் சான்றோரால் அத்துணை விழுமியவாய்ப் பாராட்டப்படாவன்றே, * என்று மறைமலையடிகள் பிறண்டும் நுணுகியுரைக்கும் நுட்பத்தையும் உற்று நோக்குக. தொகை நூல்களிலுங் கீழ்க்கணக்கு நூல்களிலும் வருங் கடவுள் வாழ்த்தெல்லாம் இவ் வகையாக உலகியற்கைகளைக் கூறுதலின் வாயிலாய் வருவனவேயாமென்று ஆசிரியர் நச்சினார்க்கினியரும் உரைத்தார்.†

இவ்வாறெல்லாம் உலகியற் பொருள்களின் உணர்வு கவருந் தன்மைகளை உள்ளவாறே தொடுத்துப் பாடுதலின் வாயிலாகப் பண்டைக்காலத்துப் புலவர்கள் இறைவனுடைய அருட்டன்மைமைகளைப் பாடிப் புகழாநிற்ப, இந்நுட்பம் உணரமாட்டாத பிற்காலத்துப் புலவர்கள், உள்ளதை உள்ளவாறே பாடுதலென்னுந் தன்மை யிழந்து ஆண்டவனுடைய அருட்டன்மைகளைப் பாடிப் புகழ்தலொழிந்து, எவற்றையுங் கற்பனை யணியாகப் புனைந்து இல்லது கிளந்து, அங்ஙனம் புனைந்து கிளவாநிற்குந் தமது கற்பனைத் திறத்தினையே போற்றி மகிழ்ந்துகொண்டார்; இயற்கைக்கு மாறாகக் கடவுளை உலகத்தினின்றும் பிரித்துப் பாடலாயினர்; ஓரோவொருகால் உலகத்தைப் பாடுவாராயின், அதனை அவர் ஆண்டவனினின்றும் பிரித்தே பாடாநிற்பர்; ஆனால் உலகியற்கையின் கிடைக்கைமுறை அஃதன்று. இறைவன் உலகுயிர்களைவிட்டு என்றும் பிரிந்து நிற்கின்றவன் அல்லன்; அவனுடைய தன்மைகளெல்லாம் நம்மனோர்க்கு உலகியற்கைகளின் வாயிலாகவே புலனாகின்றன. ஆகவே இறைவனை வழுத்துதல் கருதிய பண்டைத் தமிழ்ச் சான்றோர் அவ் வுலகியற்கையின் வாயிலாகவே பெரும்பான்மையும் வழுத்தாநின்றாரென்க. உலகமென்றது, உயிரும் ஏனை அறிவில் பொருள்களும் அடங்கியதாகும். மக்களில் இறைவனியல்புகள் தம்மாட்டு விளங்கப்பெற்றவர், சான்றோரும் புலவரும் வேந்தருமாம். ஏனை உயிர்களிற் சிறந்தது ஆன்; இனி அறிவில்லாத பொருள்களுள் ஆண்டவனருட்டிறத்தை விளக்குதலிற் றலையானது மழை; எஞ்சியவற்றிற் சிறந்தவற்றிற்கெல்லாம் உலகு என ஒன்று கோடல் பொருந்தும். எனவே,

* மாணிக்கவாசகர் காலம், ௬௪௩. † தொல், புறத், ௨௬.

ஆண்டவனுடைய அருள்விளக்கங்கள் ஏனையோர்பாற் புலனு தற்கு முதன்மையான வாயில்களாயுள்ளவைகள் 'சான்றோர் புலவர் வேந்தர் ஆனிரை மழை உலகு' என்று ஆறெனக் கூறலாம்;

"வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே"*

என்று திருஞானசம்பந்தப் பெருமானும் இவ்வறுமுறை வாழ்த்தினை விளக்கினமை காண்க. இவ் வறுவகைகளையுங் கடவுளுணர்ச்சியோடு விரும்பிப் பாடுங்கால், அப்பாட்டுக்கள் 'தேவபாடாண்டிணைக' ளெனப்படு மென்க. அங்ஙனமாயின், சான்றோர் முதலாகக் கூறப்படும் இவ்ஆறுவகையுந் தேவரினத்திற் சிறப்பினுற் சேர்க்கப்படும். இவ்வாறு 'அமரர்'கண் முடியும் அறுவகைகளையும் போற்றிப் பாடுதல் கூறப்படவே, இயற்கையாகவே பிறப்புமுறைமையினுற் சிறந்த 'இந்திரன்' முதலான 'அமர'ரைப் பாடுதலுங் கூறுமே அமையும்; அமையவே, பிறப்புஞ் சிறப்பும் பற்றிக் காணப்படும் இத்தேவரினங்களைப் பாடுதலின் வாயிலாக, முழுமுதற் கடவுளை வாழ்த்து முண்மை தேற்றித் தொல்காப்பியனுர்,

"அமரர்கண் முடியும் அறுவகை யானும்
புரைதீர் காமம் புல்லிய வகையினும்
ஒன்றன் பகுதி ஒன்று மென்ப"†

என்று தேவ பாடாண்டிணைக்கு நூற்பா வியற்றினுரென்று தெளிக. இந் நூற்பாவினைத் தொல்காப்பியனுர் முழுமுதற்கடவுள் வாழ்த்து குறித்தே இயற்றினுரென்பது, 'கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே'‡ யென்று மேலியற்றுவதொரு நூற்பாவில்

* திருஞானசம், தேவாரம், பொது. † தொல், புறத், ௨௬.
‡ ,, ,, ௩௩.

ஆசிரியர் ' கடவுள் வாழ்த் 'தென்று இதனைச் சுட்டிக் கூறுத லின் வைத்தறியப்படு மென்க.

இனி இந்நூற்பாவிற் ' புரைதீர் காமம் புல்லிய வகையினு ' மென்றது, 'ஐந்திணை தழுவிய அக' மென்றார் இளம்பூரணர். அஃதாவது, முழுமுதற் கடவுளை மேற்கூறிய அறுமுறை வாழ்த் துக்களின் வாயிலாய் வாழ்த்துதலும் அல்லாமல், அவரை நேரா கவே ஐந்திணை தழுவிய அகவுணர்ச்சியாற் பாடுதலும் மரபாகு மென்பது. 'ஒன்றன்பகுதி' யென்றது, தேவ பாடாண்டிணை மக் கட் பாடாண்டிணை யென்னும் இரண்டனுள், தேவ பாடாண்டிணை யென்னும் ஒன்றன் வகைகளாமென்க. 'ஒன்று மென்ப ' வென் பதைப் ' பொருந்துமென்ப முன்னோ 'ரென் றுரைக்க. இவ்வாற் றால், அறமுறை வாழ்த்தின் வாயிலாகவேனும் காதலுணர்ச்சி கெழுமி நேராகவேனும், முழுமுதற்கடவுள் வாழ்த்துக் கூறுந் தேவ பாடாண்டிணை யென்னும் பாடாண்டிணையின் ஒன்றன்வகை பொருந்தி வருமென்பது ' அமரர்கண் முடியு ' மென்னும் இந் நூற்பாவின் பொருளாம் ; மற்று ஆசிரியர் இளம்பூரணரும் ஆசி ரியர் நச்சினார்க்கினியரும் இதற்கு வேறாகத் தம்முள்ளும் முரணி 'அறுவகையானு ' மென்பதையும், ' புரைதீர் காம ' மென்பதை யும், ' ஒன்றன் பகுதி ' யென்பதையும் வேறுவேறாய் உரைத்தார். அவற்றின் வேறுபாடுகளை அவ்வவ் வுரையினுங் கண்டு உண்மை தெளிந்து கொள்க.

இனிப் ' புரைதீர் காமம் புல்லிய வகை ' யென்று இதன் கட் காட்டப்பட்ட காமப்பகுதி மக்கட்கு உள்ளதுபோலக் கட வுளுக்கும் உள்ளதாக வைத்துப் புலவர்கள் பாடுவரென்று ஆசிரியர்,

> " காமப் பகுதி கடவுளும் வரையார்
> ஏனோர் பாங்கினு மென்மனார் புலவர் "*

என்னு நூற்பாவில் விளக்கினார். இதற்கு நச்சினார்க்கினியர் 'கடவுண்மாட்டுக் கடவுட்பெண்டிர் நயப்பனவும், அவர்மாட்டு மானிடப் பெண்டிர் நயப்பனவுங், கடவுண் மானிடப் பெண்டிரை

*தொல், புறத், உ அ.

நயப்பனவும் பிறவுமாம்' என்று இனிது உரை காட்டினார். இனிக் காம வுணர்ச்சி யறியாத குழந்தைகள் மாட்டும் அவை அஃதுடையனபோல் வைத்துப் புலவர்கள் பாடுவரென்று 'குழவி மருங்கினுங் கிழவதாகு"* மென்னு நூற்பாவினாற் கூறினார்.

"வரிப்பந்து கொண்டொளித்தாய் வாள்வேந்தன் மைந்தா
வரிக்கண்ணி யஞ்சி யலற—வெரிக்கதிர்வேற்
செங்கோல னுங்கோச் சினக்களிற்றின் மேல்வரினு
மெங்கோலந் தீண்ட லினி"†

என்பது முதலாகப் புறப்பொருள் வெண்பாமாலையிலும் இவற்றிற்கெல்லாம் நிரம்பச் சான்றுகளுள. இனிப் பொதுமகளிரொடு கூடி மியல்பினனாய் வருந் தலைமகனது தோற்றத்தை அப் பொதுப் பெண்டிர் விரும்பி யுரைக்குமாறு வைத்தும் இக் காமப் பகுதி பாடப்படுமென்று "ஊரொடு தோற்றமு முரித்தென மொழிப"‡ வென்னு நூற்பாவினால் ஆசிரியர் உரைத்தார். இந்நிலையினையே பிற்காலத்தார், எழு பருவமாக அம் மகளிர்க்குப் பகுத்துக் கலிவெண்பாட்டால் 'உலாச்செய்யுள்'கள் செய்வாராயினாரென்று நச்சினார்க்கினியர் இந்நூற்பா வுரையிற் கூறும் பகுதி நினைவிருத்தற்பாலது. இப் பாடாண் முறைகளெல்லாம் தொல்லாசிரியன்மார் வழக்கொடு மாறாதென்பார், ஆசிரியர் "வழக்கொடு சிவணிய வகைமை யான"⁑ வென்றார்.

இனி முற்கூறிய அறுமுறை வாழ்த்தோடு ஞாயிறுந் தீயுந் திங்களு மென்னு மூன்றுங்கூட இறைவனை வாழ்த்தும் வாயில்களாமென்னும் அரும்பெருண்மையினைக்

"கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றுங்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே" ∴

யென்னு நூற்பாவில் ஆசிரியர் நன்கெடுத் துரைத்திட்டார்.

---

* தொல், புறத், உக. † புறப்-வெ, ௯௰. ‡ தொல், புறத், ௩௰.
⁑ " " ௩௧. ∴ " " ௩௩.

இந் நூற்பாவுக்குரை கூறும் வழி ஆசிரியர் இளம்பூரணர் முற்றும் வழீஇனர். ஆனல் நச்சினர்க்கினியர் "கொடிநிலை'யையும் 'வள்ளி'யையும் முறையே 'ஞாயி'றெனவுந் 'திங்க'ளெனவுந் திறமாக உண்மை மொழிந்து, 'கந்தழி'யை மட்டும் இவ்விரண் டிற்கும் இனமான தீயெனக் கூறலறியாது மயங்கி வேறு கூறினர். நச்சினர்க்கினியர்க்குப் பின்னரெழுந்து இக்கந்தழியின் உண்மைக் கருத்தினை ஆராய்ந்தாருந் தத்தமக்குத் தோன்றியவாறெல்லாம் பொருந்தாப்பொருள்களையே மாறிமாறி உரையாநின்றார். மற்றுக் 'கந்தழி யென்றது தீப்பிழம்பினையேயாம்'* என்று ஆசிரியர் மறைமலையடிகளொருவரே தமது அஃகியகன்ற பேரறிவினால் முதன் முதலாக இதற்கு மெய்யுரை கண்டு மொழிந்தனரென்க. இனி ஆசிரியர் தொல்காப்பியனர் முழுமுதற்கடவுள் வாழ்த்துக்கு வாயில்களாக 'அமரர்கண் முடியு' மென்னு நூற்பாவில் வகுத்தமைத்துக் கூறிய 'அறுமுறை வாழ்த்துக்'களிலேயே உலகென்னும் பிரிவில் ஞாயிறு தீ திங்களென்னும் இம் முப்பொருள்களும் அடங்கியனவாக, மற்றவற்றை வேறெடுத்து மொழிந்த தூஉம், அங்ஙனமே மொழிந்தன ராயினும் அவற்றை 'அமரர்கண் முடியு' மென்னும் அந் நூற்பாவிலேயே இடையிட்டு அடக்கி மொழியாமல் அவற்றிற்கென ஒரு தனி நூற்பா வியற்றி வேறு பிரித்து மொழிந்ததூஉம் என்னையோவெனின், நன்று வினயினாய்; அமரர்கண் முடியுமென்னு நூற்பாவிற் கூறப்பட்ட அறுமுறை வாழ்த்துக்களும் இறைவனியல்பு கூறி வாளா வாழ்த்துதற்கு வாயில்களாம். மற்று ஈண்டுக் கூறப்பட்ட ஞாயிறுந் தீயுந் திங்களுமோவெனின், யாண்டும் நீங்காது இரண்டற விரவி நிற்கும் ஆண்டவனைத் தமது மலத்தின் தாக்கற்றுப் பேரின்பத் தேக்குறுதற்பொருட்டாகத் தமக்கு நேர்முகமாய் அணுக்கராக்கிக் கொள்வான் கருதிய உயிர்கள் அவனை ஒரு நெறி முறையில் நின்று வழிபடுதற்கு ஏற்ற வாயில்களாகும்; இறைவன் முனைத்து விளங்குதற்கு உலகின்கண் ணுள்ள ஏனை எல்லாப் பொருள்களினுந் தீப்பிழம் பொன்றுமே மிகச் சிறந்ததாதல்பற்றி, அப்பிழம்

* மாணிக்கவாசகர் காலம், பக், சஅஅ.

பின் இயைபாய் உலகின்கட் காணப்படும் ஞாயிற்றையுந் தீயையுந் திங்களையுமே, ஆண்டவனை வழிபடுதற்குரிய வாயில்களாக ஆசிரியர் தெரிந்தெடுத்துப் பிரித்துரைத்தமை மிகவும் அமைவுடைத் தாதலுங் கண்டு மகிழற்பாலது. ஆசிரியர்க்கு இவ்வழிபாட்டுக் கருத்துண்மையினாற்றான், அவர் இம் மூன்றனையும் வாளா ஞாயிறு தீ திங்களென்னும் வழக்கப் பெயர்களாற் குறித்துக் கூறாமல், இருளை நீக்குதல், ஒளியை வழங்குதல் என்று ஆண்டவன் உயிர்களுக்குச் செய்து போதரும் நன்மைகளையே அவைதாமுஞ் செய்வனவாக அவற்றின் பெயர்களினாலேயே சுட்டிவிளக்குதல் கருதி, அவற்றைக் 'கொடிநிலை'யெனவுங் 'கந்தழி'யெனவும் 'வள்ளி'யெனவும் ஏதுப் பெயர்களாற் கூறுவாராயின ரென்க. இவ்வாற்றால் 'அமரர்கண் முடியு'மென்னும் நூற்பாவினால் முழுமுதலிறைவனுக்கு வாழ்த்துக் கூறும் வாயில்களுரைத்த ஆசிரியர், 'கொடிநிலை கந்தழி' யென்னும் இந்நூற்பாவினால் அவனை வழிபடுதற்குரிய வாயில்கள் வரைந்தோதினா ரென் றறிந்துகொள்க வென்பது; எனவே வாழ்த்தும் வழிபாடுங் கூறும் இப் பொதுச் சிறப்பு நூற்பாக்கள் முறையே ஒன்றையொன் றடுத்திருக்கற்பாலது, இயைபின்றி வெவ்வேறிடங்களிற் காணப்படுதல் பெரிதும் உற்றுநோக்கற் குரியதாகு மென்க.

இனி 'மக்கட் பாடாண்டிணை' யாவது, பரவலும் புகழ்ச்சியுங் கருதிப் பாடு முறையினுங் காமக் குறிப்புக் காட்டு முறையினும் வருமென்று ஆசிரியர்,

> "வழக்கியன் மருங்கின் வகைபட நிலைஇப்
> பரவலும் புகழ்ச்சியுங் கருதிய பாங்கினு
> முன்னோர் கூறிய குறிப்பினுஞ் செந்துறை
> வண்ணப் பகுதி வரைவின் றாங்கே"*

என்னும் நூற்பாவில் விளக்கிக் காட்டினார்; இதற்கு ஆசிரியர் இளம்பூரணர் கூறு முறையே அமைவுடைத்தாய்க் காணப்படுகின்றது. தோற்றங் கொற்றவனை விளங்கப் பாடுதலான 'கொற்ற

* தொல், புறத், உஎ.

வள்ளை' யென்பது மக்கட் பாடாண்டிணைக்கண்ணதே யாகுமென் பார், 'கொற்ற வள்ளை யோரிடத் தான'* வென உரைத்தார். இதற்கு நச்சினார்க்கினியரே மெய்யுரை கூறினர்.

என்றிவ்வகையா யுரைக்கப்பட்ட இப் பாடாண்டிணைக்கு ஆசிரியர் இனித் துறைகள் வகுத்துக் கூறுவார்.

"கொடுப்போ ரேத்திக் கொடாஅர்ப் பழித்தலு
மடுத்தூர்ந் தேத்திய வியன்மொழி வாழ்த்துஞ்
சேய்வரல் வருத்தம் வீட வாயில்
காவலர்க் குரைத்த கடைநிலை யானுங்
கண்படை கண்ணிய கண்படை நிலையுங்
கபிலை கண்ணிய வேள்வி நிலையும்
வேலி னோக்கிய விளக்கு நிலையும்
வாயுறை வாழ்த்துஞ் செவியறி வுறூஉ
மாவயின் வரூஉம் புறநிலை வாழ்த்துங்
கைக்கிளை வகையோ டுளப்படத் தொகைஇத்
தொக்க நான்கு முளவென மொழிப"†

என முதலிலொரு பத்துத் துறைகள் வகுக்கின்றார். இதன்கண், கொடுப்போரைப் புகழ்ந்து கொடாரைப் பழித்தலும், அரசனது இயல்பைப் புகழ்ந்து இயன்மொழி வாழ்த்தலும், சான்றோர் தமது வரவினைத் தலைவனுக் குணர்த்தென்று வாயிற் காவலனுக் குரைத்தலும், அரசனுக்குத் துயில்குறித் துரைத்தலும், அவனது ஆக்கொடை குறித்துக் கூறலும், வேலின் வெற்றியை நோக்கி விளக்குக் குறித்துரைத்தலும், கடுஞ்சொற் கூறியேனும் இடித்துரைத்தலும், பொருளுரைகளைச் செவியறிவுரைத்தலும், கடவுளருளால் வாழ்கவென வாழ்த்தலும், கைக்கிளைநிலை கூறலுமாகப் பத்துப் பெறப்படும்.

இனி வேறொரு பத்தும் ஆசிரியர் கூறுகின்றார்; ‡அவையாவன: அரசனைச் சூதர்கள் துயிலெழுப்புதற்குக் கூறுந் 'துயிலெடை நிலை'யும், அரசன் மாட்டுப் பரிசில் பெற்ற கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியுந் தாம் பெற்றதை வறிஞர்க் கறிவித்து ஆற்றுப்படுத்தும் 'ஆற்றுப்படை'யும், செற்றம் நீக்கிச்

* தொல், புறத், ௩௪; † ௩௫; ‡ ௩௬.

செருவொழிதல் கூறும் 'பெருமங்கலமும், ஆண்டுதோறும் முடி புனையும் வழி நீராடுதல் உரைக்கும் 'நீராட்டு மங்கல'மும், கொற்றக் குடை நிழலின் சிறப்புக் கூறுங் 'குடைநிழன் மரபு'ம், வாள்வாழ்த்து கூறும் 'வாண்மங்கல'மும், பகைவர்களின் எயிலை இடித்து, அவர்தம் மங்கலத்தை யழித்து அதனை அரசனெய்துதல் மொழியும் 'மண்ணுமங்கல'மும், பரிசில் வேண்டுங் 'கடைக்கூட்டுநிலை'யும், பரிசில் பெற்ற பின் விடைபெற்றுச் செல்லலுரைக்கும் 'இருவகைவிடை'யும், அரசனுக்கு நாளானும் புள்ளானுந் தீங்கிருப்பதாகக் கண்டக்கால், அஃதொழிக வெனக் கூறும் 'ஓம்படை'யுமாகும்.

இவற்றுள் முற் பத்துத் துறைகள் சான்றோர் கூற்றெனவும் பிற்பத்தும் ஏனையோர் கூற்றெனவுங் காணப்படலின், ஆசிரியர் இவைதம்மை வேறு வேறாய்ப் பிரித்துரைத்தாரென் றறிந்து கொள்க. புறப்பொரு ளொழுக்கங்களில் அரசனொழுகலாற்றையே சிறப்பா யெடுத்துக் கூறும் மரபுபற்றி, இத் திணைக்கண்ணும் அவன்றனுக்கே ஆசிரியர் துறை வகுத்துக் காட்டுவாராயினரென்க.

இனி இப் 'பாடாண்டிணை'யும் இதற்குமுன் வந்த 'காஞ்சித் திணை'யும் அரசனுடைய அரசிய லொழுக்கங்க ளாகா; மற்று இவை அவன்றன் அறவொழுக்கங்களாகும்; இவ்வற வொழுக்கங்களை அவன் எஞ்ஞான்றும் உடையனயிருத்தல் வேண்டுமாகலின், இவைதாம் வெட்சி முதல் வாகை யீறாக நிகழும் ஐம்பெரும் புறவொழுக்கங்கட்கும் பொதுவாய் அவற்றுள் அடங்கு மென்க. இங்ஙனமே அகப்பொருட் கண்ணுங் 'கைக்கிளை'யும் 'பெருந்திணை'யு மென்னும் இரண்டும் நடுவணைந்திணைக் காமத்தையே ஓராற்றாற் குறிக்கொண்டு நிகழ்வனவாகலின்,மற்றிவைதாமும்அவ் வைம்பெரும் அகவொழுக்கங்கட்கும் பொதுவாய் அவற்றுள் அடங்கு மென் றறிந்துகொள்க; இவ்வாற்றானும் இக்'காஞ்சி' 'பாடாண்'டிணைகள் 'பெருந்திணை' 'கைக்கிளைத்திணை'களின் புறனுமாறு பெறப்படும்; அல்லதூஉம், 'காஞ்சித்திணை' யென்பது அரசனைப் புலவர்கள் வலிந்து நிலையாமை யறிவுரைத்துத் தன் வழிப்படுத்துத

லாகலின் அங்ஙனமே பொருந்தாக் காமத்தாற் காதலர்கள் தம்முள் ஒருவரை யொருவர் வலிந்து வழிப்படுத்துக் கொள்வதான 'பெருந்திணைக்'கு அது புறனாதலும், 'பாடாண்டிணை' யென்பது அரசன் பரிசில் கருதிப் புலவர்கள் பாடுதலாகலின், அங்ஙனமே காதலர்கள் தம்முள் ஒருவரொருவரது நலங் கருதி நினைக்குங் 'கைக்கிளை'க்கு அது புறனாதலும் அமையுமென்பது.

---

# திருவள்ளுவர் – ஒரு மரநூற் பேராசிரியர்

[திரு. அ. மா. முத்தையா நாட்டாரவர்கள்]

(கூ-ம் சிலம்பு கூஅ௰-ம் பக்கத் தொடர்ச்சி)

—: வித்து :—

நம் திருவள்ளுவர், வித்து, என்னும் எடுத்துக்காட்டைத் தாமருளிய குறளில் சென்ற கட்டுரையில் காட்டிய குறளிலன்றிப் பலவிடங்களில் நுண்ணூற்பொருள் மிளிர மிகத் திறம்பட வைத்தாளுகின்றார். ஒவ்வோரிடத்தும் வித்தின்பாற் கண்ட சில சிறப்பிலக்கணங்களைத் துணையாகக் கொண்டு மக்கள்பாற் சிறப்புற்று நிகழும் குணங்கள் முதலிய கூற்றின் வகை தெரிந்து சீர்தூக்குவர். அவர் கூறும்:—

" நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க
மென்று மிடும்பை தரும் "

என்னும் குறளில், தெளிவுற்றுத் தித்தித்தினிதூறும் வரம்பற்ற நுண்ணூற் பெருக்கினை யாராய்தல் என்போன்ற சிறியேற்கு மிகவு மெளிதன்று. இக்குறளை யாராயவேண்டின், ஒழுக்கமென்பதென்னை யென்பதூம், அதின வகையும், விரிவும்; அகப்புற வொழுக்கமென்னை யென்பதூம்; அவற்றின் தொடர்பும்

துணையும்; இவ்வொழுக்கம் நன்மைக்கு வித்தாதல் எங்ஙனமென்பதூஉம்; நாதவிந்துவின் வினையும், பயனும்; அகப்புறவொழுக்கத்தால் நாதவிந்துவின் குணம் வேறுபடலுண்டோ? இல்லையோ? என்பதூஉம்; உண்டேல் அவற்றின் முறையு, மிலக்கணமும்; மற்று மாராய்தல் வேண்டும். அங்ஙனமே,

> " அவாவென்ப வெல்லா வுயிர்க்கு மெஞ்ஞான்றுந்
> தவாஅப் பிறப்பீனும் வித்து "

என்னும் குறளையும், மிக நுணுகியாராய்ந்தாலன்றித்திருவள்ளுவர் கருத்தனைத்தும் தெளிவுறக் காண்டலரிது. இவ்வித நுண்ணூலாராய்ச்சி முறை, மரம், விலங்கென்னும், இருபெரும் உயிர் வகுப்புக்களுக்கும் பொதுப்பட்டதெனினும் தற்கால நுண்ணூலாராய்ச்சிக்காரர்கள் மிகவும் மரவுயிரையே துணையாகக்கொண்டு இத்துறையில் மிகவும் பரந்த வாராய்ச்சி செய்திருக்கிறார்கள்; செய்து வருகிறார்கள். இத்துறை மரநூலின் ஒரு சிறப்புப்பகுதியாகும். இம்முறை ஆங்கிலத்தில் 'genitics' எனப்படும். நம் தமிழ் மொழியில் இம்முறையை "நாதவிந்துவினிலக்கண நூல்" எனக் கூறலாம். இத்துறையின் நுண்ணூலாராய்ச்சியாளர்கள், மேனாட்டில் புகழ்பட விருந்தார்பலர்; இருக்கின்றார் பலர். அத்துறையின் உயர்ந்த நிலையை யாராயும்பொழுது, மேனாட்டார்கள் பலரும் ஒற்றுமைப்பட்ட கருத்துடையவர்களாய்க் காணப்பட்டிலர். நிற்க, ஆராய்ச்சியே தற்காலம் மேனாட்டிலும் நம் நாட்டிலும் மிகவும் பெருமையுற்று வளர்கின்றது, இவ்வாராய்ச்சியில் பெரும்பட்டங் கொண்டார் பலர், நம் நாட்டில் ஆயிரக்கணக்காகத் திங்கள் வருமானம் பெற்று வருகின்றார்கள். இம்முறை பொதுவில் மரநூலினுட்பட்டதெனினும், மரநூலினொரு சிறப்பு வகுப்பாகும். இம்முறையில் திருவள்ளுவர் வித்தைத் துணையாகக்கொண்டும், மக்கள்பாற் சிறப்புற்றுக் காணும் நிகழ்ச்சிகளைக் காட்டு முகத்தான் வித்தையன்றி வேறு குறள்களில் விளக்கியனவும், என்னறிவிற் கெட்டியவாறு பொதுவகையில் இச் சிறப்பு முறையை யாராய்ந்து அவற்றிற்கும், தற்கால நுண்ணூலாராய்ச்சிக்காரர்கள் கருத்திற்கும் தோன்றும் ஒற்

றுமை வேற்றுமைகளைப் பின்பு விளக்க விரும்பும் கருத்துடன் மரநூலின் பொது வாராய்ச்சியாக வெடுத்துக்கொண்ட விக்கட்டுரையை மேலாராய்ந்து செல்லுவன்.

சென்ற கட்டுரையில் திருவள்ளுவர் அருளிய சில குறள்பாக்களைக்கொண்டு அவர் வித்தினிலக்கணத்தையும் அதிற் கண்ட நிகழ்ச்சிகளையும் ஆராய்ந்து அவ்வுண்மைகளிலிருந்து உருவிக் கொணர்ந்த தத்துவ வுண்மைகளை உயர் வகுப்பு மக்கள்பாற் கண்ட தத்துவ வுண்மைகளுடன் திறம்பட வாராய்ந்த முறையை ஒருவாறு விளக்கினேன். இக்கட்டுரையில் திருவள்ளுவர் காட்டியபடி வித்தினின்றும் தோன்றிய வங்குரமும், தாரகமும், வளர்ந்து தளிர்த்து மரமென நிற்கும் ஒருயிர், தான் மேலும் வளர்ந்து தளிர்த்துப் பூத்துப் பயனடையவேண்டின் அவ்வுயிர் திறனுற்றதாயிருத்தல் (சத்தியுற்றதாயிருத்தல்) வேண்டும். அன்றியும் உயிர் உலகினில் நிலைபெற வின்றியமையாதனவாகிய யாக்கை நிலைபெற்றமையப் புறத்திணைப் பொருள்களில் முக்கியமானதான நீர், அம்மரவுயிரால் உட்கொள்ளப்படும் நிலையிலும்; அங்ஙனம் உள்கொள்ளப்படினும் அந்நீர் உணவுப் பொருளாகும் நிலையிலும்; அம்மரவுயிரின் அகத்தில் உணவுப்பொருள் ஆக்கப்படுதற்கு அந்நீர் துணைப்பொருளாகும் இயல்புடையதாயு; மிருத்தல் வேண்டும். இந்நூற்குறிப்பைத் தமிழ் மரபினும்,

“ நீரின்றமையா யாக்கைக் கெல்லாம் ”

என்று கூறும் புறநானூறு 18-ம் செய்யுளானுமறிக. பின்னும் அந்நீரின் வழி நிலப்பொருள்களையும் காற்றையும் அம் மரவுயிர் உட்கொள்ளவேண்டும். நிலம், நீர், காற்று இவைகளினின்றுங் கதிரவனின்று மேற்கும் சக்திகொண்டு அம் மரவுயிர் தனக்கு வேண்டிய உணவுப்பொருளைச் சமைக்குமாற்ற லுடையதாயிருத்தல் வேண்டும். இக் குறிப்பை நம் தமிழ் மரபினும்,

“ உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரு நிலனும் புணரி யோரீண்
டுடம்பு முயிரும் படைத்திசி னோரே ”

என்று கூறும் புறநானூறு 18-ம் செய்யுளானுமறிக. நீரினின்று

பிரித்துக்கொள்ளும் காற்றும், நீரின் வழி நிலவி உட்கொள்ளும் காற்றும் உணவுப்பொருளாய்ச் சமைக்கப்படுதலின் காற்றையும் நீரினுள் அடக்கிக் கூறினார்போலும். மேற்காட்டிய குறிப்புகளனைத்தையும் சுருங்கச்சொல்லின் ஓருயிர் தான் சிறப்புற்றிருக்க வேண்டின் தன்னகத்திலாற்றலுடையதாயிருப்பதுடன் தானிற்கும் புறமும் தன் வளர்ச்சிக்குத் துணையுடையனவாய் அமைக்கப்பெற்றிருக்கவேண்டும். மரமென்னுமுயிர் நிலத்தில் நிலைபெற்றிருப்பதாலும்; தன்னிடம் உரமென்னும் குணம் சிறப்புற்றின்மையானும்; தன்னிகழ்ச்சியை மிகுதியும் புறநிகழ்ச்சிக் கேற்றவாறு நிகழ்த்தி வருதலாலும்; அம் மரவுயிருக்கு மேற்காட்டிய நலம்பட்ட புறவமைப்பு மிகுதியும் வேண்டற்பாற்று. நம் திருவள்ளுவர் இக்குறிப்புகளனைத்தையும் கண்ணழித்து ஒரு மரத்தைக் காட்டாகக் கொண்டு அம் மரவுயிர் நிலையில் தானின்று, அதின் நிகழ்ச்சிகளனைத்தையும் உலகிற்கோதுவான் வேண்டியும், உயர் வகுப்புயிர்க்குத் தான் வாழ்க்கை நலம் பெற்றுத் தளிர்க்க, இன்றியமையாதனவாகிய அன்பென்னு முயிரினாற்றல், (சக்தி) உயிர் மாட்டுவளருமியல்பை விளக்கவேண்டியும், தான் எடுத்துக்காட்டிய மரம் நீரை உருவுமியல்பை விளக்கு முகத்தால் தன் அளப்பரும் நுண்ணூலாராய்ச்சியின் நுணுக்கத்தைக் காட்டுகின்றார். தன் உடன்பிறந்த குறிஞ்சிப்புலவர் எடுத்துக்காட்டியபடி ஒரு சிறு கடுகின் உள்வெளியில் எழுகடலை யடைப்பதுபோல், தனித்தும் ஆராய்தற்கரிய எழு பெரும் முறைகளை ஒரு சிறு குறள் பாவில் ஒடுக்கியடைத்து,

> "அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
> வற்றல் மரம் தளிர்த்தற்று"

என்றருளி விளக்குமாற்றல் எண்ணற்கு மெளிதன்று. திருவள்ளுவர் காலத்திற்குப் பிற்பட்ட புலவர்களுள் பல பேரறிஞர்கள் இக்குறளின் பகுதியையோ, வன்றி இக்குறளின் பொருளையோ தங்கள் கவிகளில் கவின்பெற வமைத்துக் காட்டியுள்ளார்கள். பிற்காலத்துப் புலவர்கள் பலர் இக்குறளைப் பல வெளியீடுகளில் ஆராய்ந்தும், விளக்கியும், புத்துரை கண்டும், அதை மறுத்துமிருக்கின்றார்கள். (தொடரும்)

# தென்னிந்திய தமிழ்ச்சங்கம்

# திருநெல்வேலி

## தனித்தமிழ்த் தேர்வுகளின் தேர்ச்சிக் குறிப்பு

செந்தமிழ் வளர்ச்சி கருதி 1924-ல் நிறுவப் பெற்றுச் சென்ற நான்கு யாண்டுகளாகத் தனித் தமிழ்த் தேர்வுகள் சென்னை, திருச்சி, சிதம்பரம், கோயம்புத்தூர், திருநெல்வேலி, ஆரணி, ஆகிய ஆறு நகர்களில் நடத்திவருகிற தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தின் தனித் தமிழ்த் தேர்வுகள் 1929 ஜூன் 26, 27, 28 (706 ஆனி 13, 14, 15) ம் நாட்களில் மேற்குறித்த ஆறு நகரங்களிலும் நடைபெற்றுள்ளன. நிகழ்ச்சி யாண்டில் முதலாவதாகிய **தமிழ்த்தேர்வுக்கு** விண்ணப்பித்தவர் ஒன்பதின்மர்; எழுதியவர் எழுவர்; தேர்ச்சியுற்றவர் மூவர். இரண்டாவதாகிய **இளந்தமிழ்ப் புலவர்** தேர்வுக்கு விண்ணப்பித்தவர் ஒன்பதின்மர்; எழுதியவர் எழுவர்; தேர்ச்சிபெற்றவர் நால்வர். தேர்ச்சி வகையை அடியிற் காண்க.

தேர்வுக்கு வேண்டிய வினாத்தாள்கள் குறித்தும் விடைத் தாள்கள் திருத்தியும் உதவிபுரிந்த தமிழறிஞர்கட்கும் அவ்வவ்விடங்களில் தேர்வுகளை மேற்பார்த்து நடத்தித் தந்த அன்பர்கட்கும் இச்சங்கத்தின் நன்றி யென்றும் உரியது.

## தேர்ச்சி வகை

### இளந்தமிழ்ப் புலவர்

#### இரண்டாம் வகுப்பு

| தொடரெண் | பதிவெண் | பெயர் வகை |
|---|---|---|
| 1 | 15 | A. நடேசப்பிள்ளை, தலைமை யாசிரியர் போர்டு பாடசாலை, மேல்நகர், ஒண்ணுபுரம் போஸ்டு, வடஆற்காடு ஜில்லா. |

மூன்றும் வகுப்பு

| | | |
|---|---|---|
| 2 | 19 | V. கோவிந்தராஜநாயக்கர், டீச்சர், தண்டு குண்ணத்தூர், (P. O.) ஆரணி, வடஆற்காடுஜில்லா. |
| 3 | 12 | R. திருமலை ஐயங்கார், கலங்கல். பல்லடம் தாலுகா, சூலூர்ப்போஸ்ட்டு, கோயம்புத்தூர். |
| 4 | 20 | K. நாகராஜராவ், சஞ்சீவிராவ் சந்து தெப்பக்குளம் (P. O.) திரிசிரபுரம். |

தமிழ்த் தேர்வு

மூன்றும் வகுப்பு

| | | |
|---|---|---|
| 5 | 51 | மா. ஐயாத்துரைராஜ், தமிழ்ப்பண்டிதர், திருத்தண்கால், சாத்தூர்த்தாலுகா, இராமநாதபுரம் ஜில்லா. |
| 6 | 58 | மா. ஞானக்கண், கன்னங்குளம் தெற்கு, கருங்குளம் (P. O) பணகுடி, திருநெல்வேலிஜில்லா. |
| 7 | 56 | A. அண்ணாமலையுடையார், தமிழ்ப்பண்டிதர், C. C. C. H. School, Tri-vellore, M. S. M. Railway. |

இவ்வெழுவர்க்கும் உரிய தேர்ச்சி இதழ்கள் பின்னர்த் தனித்தனி யனுப்பப்பெறும்.

நமது தமிழ்ச் சங்கத் தேர்வுகளின் பாடமுறைகள் 1930 ஜூன் தேர்வு முதலியவற்றிற்கு மாற்றப்பட்டிருக்கும் விவரம் அறிந்து மாணவர்கள் பலராக வரும் யாண்டுகட்கு விண்ணப்பித்துத் தேர்ச்சிபெற வேண்டுகின்றேம்.

15—10—1929, திருநெல்வேலி. }

பு. சி. புன்னைவனநாதன்,
அமைச்சர்.